விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 09 ஞாயிற்றுக்கிழமை (25.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 341




# உலகமயமாதல் என்றுமில்லாதவாறு உலகின் முகத்தை மாற்றியுள்ளது



## 'வெளிச்சம்' இதழின் வாழ்த்துச் செய்தியில் தலைவர் பிரபா

(கிளிநொச்சி)

இன்று நாம் மாற்றங்கள் நிகழும் புதியதொரு உலகச் சூழலிலே வாழ்கின்றோம். உலகமயமாதல் என்ற புதிய யுகத்திலே வாழ்கின்றோம். இந்த உலகமயமாதல் என்றுமில்லாதவாறு இன்று உலகின் முகத்தை முற்றாக மாற்றியமைத்திருக்கிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் 'வெளிச்சம்' இதழுக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு ,

ஒரு தேசம் அரசியல் இராஜதந்திர வழிமுறைகளூடாகத்தான் தனது கருத்து நிலைப்பாடுகளை முன்வைக்கலாம் என்ற காலம் காலமாக நிலவிய மரபு நிலையை மாற்றியிருக்கிறது.

கலை இலக்கியங்கள் ஊடாக கருத்துக்களை முன்வைத்து, நியாயம் தேடுகின்ற ஒரு ஏதுநிலை இன்று தோன்றியிருக்கிறது.

அதிலும் குறிப்பாக கலை இலக்கியங்கள் ஊடாக கருத்துக்களை கடத்துவது ஒரு முக்கிய இராஜதந்திர அணுகுமுறையாகவே வளர்ந்திருக்கிறது.

இத்தகைய கருத்துப் பரம்பலைச் செய்வதற்கு மனித முதலீடு முக்கியமானது. ஆற்றலும் அனுபவமும் தகைமையும் கொண்டு தேர்ச்சி பெற்ற படைப்பாளிகள் இதற்குத் தேவை. இவர்கள் புதிதாக சிந்திப்பவர்களாக, புதுமை படைக்கின்ற *(08 ஆம் பக்கம் பார்க்க)*

# பாகிஸ்தானை ஆதரிக்கும் முடிவால் இலங்கை-இந்திய உறவில் விரிசல்?

## ஜனாதிபதி மகிந்த-மன்மோகன் சிங்குடன் சந்திப்பு

(புதுடில்லி)

பொதுநலவாய நாடுகளின் பட்டியலில் இருந்து பாகிஸ்தானை நீக்கும் விடயத்தில் இலங்கை எடுத்துக் கொண்ட நிலைப்பாட்டால் இந்தியா அதிருப்தியடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. *(08 ஆம் பக்கம் பார்க்க)*



# புலிகள் தரப்பில் இவ்வருடம் 954 பேர் உயிரிழப்பு

# 954 பேர் உயிரிழப்பு

## மாவீரர்களின் எண்ணிக்கை 19,887

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றில் இந்த வருடம் 954 புலிகள் வீர மரணம் அடைந்திருப்பதாகவும் அதேநேரம் இதுவரையான காலப் பகுதியில் 19 ஆயிரத்து 887 புலிகள் வீரமரணம் அடைந்திருப்பதாகவும் புலிகளின் மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றில் 1982.11.27 ஆம் திகதி முதல் 2007.11.20 ஆம் திகதி வரை உயிரிழந்த மாவீரர்களின் விபரத்தினை புலிகளின் மாவீரர் பணிமனை நேற்று வெளியிட்டிருந்தது.

அதன்படி (08 ஆம் பக்கம் பார்க்க)



### யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை பாதுகாப்பு ஊழியர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளையின் பாதுகாப்பு ஊழியர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் கரவெட்டி யாக்கருவைச் சேர்ந்த (08 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையிலும் உரும்பிராயிலும் இருவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஆனந்தன்வடலி வீதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் பால் வியாபாரி ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சம்பவத்தில் 3 பிள்ளைகளின் தந்தையான துரைராசா ஜெயராசா (வயது-41) என்ற பால் வியாபாரியே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்றுக் காலை 7 மணியளவில் உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவிலடியில் வியாபார நிலைய விற்பனை உதவியாளர் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பழனியாண்டி செல்வராசா (வயது-32) என்பவரே சுட்டுக் (08 ஆம் பக்கம் பார்க்க)

### களுவாஞ்சிக்குடியில் கிளைமோர் தாக்குதல் பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக் களுவாஞ்சிக்குடியில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி களுதாவளை என்ற இடத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் இக் கிளைமோர்த் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கல்முனை- (08 ஆம் பக்கம் பார்க்க)

பெண்களிற்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரம் Nov 25 - Dec 25

பால் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் எனும்போது ஒருவர் பால்நிலை வேறுபாட்டின் காரணத்தினால் உடல் ரீதியாகவோ பால்ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ துன்புறுத்தப்படலாகும்.

பால் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு, யாழ்ப்பாணம் - 021 222 6922, 021 222 9671

(C-560)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்தவர்களை பலவந்தமாகக் குடியேற்ற வேண்டாம் அரசுக்கு ஐ.நா. அகதிகள் ஆணையம் எச்சரிக்கை

இலங்கையின் கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைந்துள்ள நிலையில் அதனை சீர்படுத்தாமல் இடம்பெயர்ந்தோரைப் பலவந்தமாக மீள்குடியேற்றம் செய்யக்கூடாது என்று அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஐ.நா. அகதிகள் ஆணையம் விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கையின் கிழக்குப் பகுதியில் சீர்குலைந்துபோன பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் பல்வேறு சம்பவங்கள் குறித்து நாம் கவலை கொள்கின்றோம். 2006 ஆம் ஆண்டில் மோதல்களைத் தொடர்ந்து இடம் பெயர்ந்த திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 250 பேர் சில வாரங்களுக்கு முன்பாக தங்கள் வாழ்விடங்களுக்குத் திரும்பியிருந்தனர்.

இருப்பினும் அங்கு பாதுகாப்பு நிலைமைகள் மோசமாக இருந்தமையால் அவர்கள் மீண்டும் இந்த வாரம் மட்டக்களப்பு மாவட்ட நலன்புரி மையங்களுக்குத் திரும்பியுள்ளனர். எண்ணற்றப் படுகொலைகள், கடத்தல்கள், சித்திரவதைகள் என பொதுவாகப் பாதுகாப்பற்ற நிலைமையே கிழக்கில் இருப்பதாக எமது ஐ.நா. அதிகாரிகள் ஆணையகத்திற்கு அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இத்தகைய நிலைமையினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் அகதிகள் மீளவும் தங்கள் வாழ்விடங்களுக்குத் திரும்ப இயலாத நிலைமையுள்ளது. இடம்பெயர்ந்தோரின் வீடுகள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இதனால் அவர்கள் மீண்டும் தங்கள் வாழ்விடங்களுக்குச் செல்வது பாதிக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற பாதுகாப்பு என்பது மிக முக்கியம். அதனை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குண்டு.

ஆகையால் மீள்குடியேற்றத்துக்கான நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதோடு அம்மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

மேலும் இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் பொதுமக்களை மீள்குடியேற்ற முயற்சிக்க வேண்டாம் என்றும் எச்சரிக்கின்றோம். மட்டக்களப்பு செங்கலடிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்கள் பலவந்தமாக மீள்குடியேற்றப்பட்டுள்ளமை குறித்து ஐ.நா. அதிகாரிகள் ஆணையம் கவலை கொள்கின்றது.

அப்பகுதியில் 92 குடும்பங்களைச் சேர்ந்தோர் மீள்குடியேற விருப்பமில்லை என்று எமக்குத் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் நிவாரணப் பொருள்களும் சூறையாடப்பட்டுள்ளன.

அனைத்துலக நடைமுறைகளுக்கேற்ற வகையில் இடம்பெயர்ந்தோர் தாங்களாகவே மீள்குடியேறுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். இடம்பெயர்ந்தோரின் உரிமைகள் தொடர்பான வல்லுநர்களுடன் அரசாங்கம் ஆலோசனை நடத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## காமன்வெல்த் அமைப்பின் பொதுச்செயலாளராக இந்திய கமலேஷ் சர்மா தெரிவு

(புதுடில்லி)

காமன்வெல் அமைப்பின் பொதுச் செயலாளராக இந்தியாவின் கமலேஷ் சர்மா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

காமன்வெல்த் அமைப்பின் பொதுச் செயலாளராக இருந்து வரும் டொன் மெக்கினனின் பதவிக்காலம் முடிபடைந்ததையடுத்தே புதிய பொதுச்செயலாளரை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது.

உகண்டா தலைநகரில் நடைபெறும் காமன்வெல்த் நாடுகள் மாநாட்டில் இதற்கான தேர்தல் நடைபெற்றது. இதில் பிரிட்டனுக்கான இந்திய தூதர் கமலேஷ் சர்மா மற்றும் மால்டா வெளியுறவுத்துறை அமைச்சர் மைக்கேல் பிரண்டோ ஆகியோர் போட்டியிட்டனர்.

பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவை பெற்று கமலேஷ் சர்மா புதிய பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

காமன்வெல்த் அமைப்பில் இந்தியர் ஒருவர் உயர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல்முறை. கமலேஷ் சர்மா ஐ.நாவுக்கான இந்திய நிரந்தர பிரதிநிதியாக இருந்து வருகிறார்.

அவரது வெற்றிக்காக இந்திய அதிகாரிகள், உறுப்பு நாடுகள் மத்தியில் ஆதரவு திரட்டி வந்தனர்.

(ந-5)

## பட்ஜெட்டிற்கான ஆதரவு குறித்து முஸ்லிம் காங்கிரஸ் மீள்பரிசீலனை

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டம் மீதான மூன்றாம் நிலை வாசிப்பில் அரசாங்கத்தைத் தொடர்ந்து ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆராய்ந்து வருவதாக அக்கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இது குறித்து ஆராய்வதற்கென முஸ்லிம் காங்கிரஸ் உயர் மட்டக் குழுவொன்றையும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு நியமித்திருந்தது. இந்தக் குழுவினர் எதிர்வரும் முதலாம் திகதி கூடி வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறித்து இறுதி முடிபை எடுப்பர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்கம் உறுதி வழங்கிய பல்வேறு விடயங்கள் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கும் நிலையிலும் ஏனைய பல விடயங்களைக் கருத்தில் கொண்டும் அரசுக்கான ஆதரவு குறித்து மீள் பரிசீலனைசெய்ய வேண்டும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்தே வரவு-செலவுத் திட்டம் மீதான மூன்றாம் நிலை வாசிப்பில் அரசாங்கத்தைத் தொடர்ந்தும் ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறித்து ஆராய உயர் மட்டக் குழுவொன்றைக் கட்சித் தலைமை நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-5)

## இரங்கல் பதாகைகளை அகற்ற முற்பட்ட காங்கிரஸார் மீது தாக்குதல் -ஈரோட்டில் சம்பவம்

(சென்னை)

தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டம் கோபியில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வைக்கப்பட்டிருந்த பதாகையை அகற்ற முயன்ற காங்கிரஸ் கட்சியினரை தமிழின உணர்வாளர்கள் தாக்கியுள்ளனர்.

கோபியில் நேற்றுக் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய இந்திய மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் தமிழகத்தில் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு இரங்கல் தெரிவித்து எங்கு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தாலும் அகற்றுங்கள். என்ன நடந்தாலும் நான் பார்த்துக் கொள்கின்றேன் என்று பேசியதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்துக் கோபியில் உள்ள தேநீர்க் கடை ஒன்றின் முன்பாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் இரங்கல் கவிதையுடன் வைக்கப்பட்டிருந்த பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இரங்கல் பதாகையை காங்கிரஸ் கட்சியினர் அகற்ற முயற்சித்துள்ளனர்.

இதன்போது தி.மு.க. உறுப்பினர்கள் மற்றும் விடுதலைச் சிறுத்தைக் கட்சியினர் திரண்டு காங்கிரஸ் கட்சியினரை அடித்து விரட்டினர். இந்த மோதலில் காங்கிரஸ் கட்சியினரின் இரண்டு வாகனங்கள் சேதமடைந்தன.

மேலும் இந்திய மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை வழிமறித்து மறியலில் ஈடுபட முயற்சித்த வேளை பொலிஸாரின் உதவியுடன் அவர் தப்பி விட்டார்.

(ந-5)

## பிள்ளையார் கதை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹா கணபதிப் பிள்ளையார் திருக்கோவில் பிள்ளையார் கதையும் இலச்சார்ச்சனையும் மஹாயாகமும் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 15 ஆம் திகதி வரையான 21 நாட்கள் இடம்பெறவுள்ளன.

இலச்சார்ச்சனை தினமும் காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரையும் நடைபெற்று தொடர்ந்து பிள்ளையார் கதையும் படிப்பும் இடம்பெறும். (ந-5)

## இலங்கையின் எண்ணெய் வளங்களை அபகரிக்க உலக நாடுகள் புலிகளுக்கு உதவி புரிகின்றன

### ஜே.வி.பி. விமல்வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

எண்ணெய் அகழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு அமைக்கப்படுமென்று பெற்றோலியத் துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச பேசியதாவது, எண்ணெய் அகழ்வுப் பணிக்கு வெளிநாடுகளை அனுமதிக்கும்போது அரசாங்கம் எச்சரிக்கையாகவிருக்க வேண்டும்.

நைஜீரியா, சூடான் ஆகிய எண்ணெய் வளமிக்க ஆபிரிக்க நாடுகளில் உள்நாட்டு மோதல்கள் உருவாக்கப்பட்டிருப்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். எண்ணெய் வளங்களை அபகரிப்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாதத்திற்கு மேற்கத்தைய நாடுகள் உதவுகின்றன என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பௌசி, எண்ணெய் அகழ்வுப் பணிகள் தொடர்பாக ஜே.வி.பி. தமது பரிந்துரைகளை அரசாங்கத்துக்கு அனுப்பலாம். அதுவரை எண்ணெய் அகழ்வுக்கான ஒப்பந்தக் கோரல்களை ஒத்திவைக்க அரசாங்கம் தயாராகவுள்ளது.

மேலும் எண்ணெய் அகழ்வு தொடர்பிலான செயற்பாடுகளை ஒருங்கிணைக்க அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அமைக்கப்படுமென்றார். (ந-5)

## ஜனாதிபதி மகிந்த இன்று ஈரான் விஜயம்

உகண்டாவில் நடைபெற்ற பொது நலவாய ந[illegible]ளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து[illegible]ண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈரானுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஈரானுக்கு இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஈரான் நாட்டின் ஜனாதிபதி அஹமட் நிஜாட்டை சந்தித்து இரு நாட்டினதும் பரஸ்பர உதவிகள் தொடர்பாக கலந்துரையாடுவார்.

அதன்பின்னர் ஈரான் நாட்டின் மதத் தலைவர்கள் உட்பட முக்கிய அரசியல் பிரமுகர்களையும் சந்தித்து இரு நாடுகளது நீண்ட கால நல்லுறவுகள், வர்த்தகத் தொடர்புகள், முதலீட்டுத்துறைகள் மற்றும் உதவிகள் தொடர்பாக ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளதாகவும் தெரியவருகிறது.

(ந-5)

## அதிபரை மிரட்டி பணம் பறிப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை நுணாவில் சந்தியூடாக அராலி வடக்குக்குச் சென்ற பாடசாலை அதிபர் ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மிரட்டி 15 ஆயிரம் ரூபாயை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. (ந-5)

## ரவிராஜ் கொலை தொடர்பான ஸ்கொட்லண்யார்ட் பொலிஸாரின் அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை

### குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் கொலைச் சம்பவம் தொடர்பான தடயங்கள் குறித்து ஸ்கொட்லண்யார்ட் பொலிஸாரின் விசாரணை அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு சமர்ப்பித்த அறிக்கையின் மூலம் இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரையும் அடுத்தமாதம் 7 ஆம் திகதிவரை தொடர்ந்தும் மறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் சுஜாதா அழகப்பெரும உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் தொடர்பாக எடுக்கப்படும் சட்டரீதியான நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபருடன் ஆலோசனையை கோரியுள்ளதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது. (ந-5)


## திருமண சேவை

www.thaalee.com This is the one and popular and pioneer website for the Sri Lankan Tamil Nation residing all over the world, Providing Astrological Prediction, Consultation, Meditation and Match-making by the Famous Astrologer S.Sarma. J.P

பெற்றோர்களே! இன்றுடன் உங்கள் பிள்ளைகளுக்கு பெண், மாப்பிள்ளை பார்க்கும் படலத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமா? அப்படியானால் உடனே www.thaalee.com என்ற website மூலமாக இயங்கும் திருமண சேவையை நாடுங்கள்.

இந்த இணையத்தளத்தில் 3000 க்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுடைய ஜாதகம் மற்றும் புகைப்படங்களுடன் முழு விபரங்களும் உள்ளன.

45/1,Madampitiya Road,Colombo-15

தொலைபேசி: 0112523127

(சி-559)

# எண் சோதிடம்

(எண் 4இன் சென்றவார தொடர்ச்சி...)

94. இவ்வெண் உள்ளோர் உலகிற்கு அநேக நன்மைகளை அளிப்பர். பொதுவான சமூக சீர்திருத்தங்களைச் செய்வர். சுகவாழ்க்கையும், புகழும் அடிக்கடி ஏற்பட்டு மாறும். வாழ்நாளுக்குப் பின்னரும் நீடிக்கும் நற்செயல்களைக் குறிப்பதால் இது அதிர்ஷ்டகரமானதாகக் கருதக்கூடிய எண்ணே.

103. இப்பெயரும் அதிர்ஷ்டமானதே. முதலில் செல்வநிலையில் தான் முன்னேற்ற மேற்படும். பிறகு தொழிலில் மாற்றமும் ஏற்படும். போட்டி உண்டாகும். வாழ்க்கை முடிவு மங்களகரமாக அமையும்.

**அதிர்ஷ்ட காலம்:** பெயரோ பிறந்த திகதியோ நான்கு எண்ணிக்கையாக உடையவர்களுக்கு 1,10,19,28 திகதிகள் அதிர்ஷ்ட தினங்களாகும். இதில் 28 ஆம் திகதி கிடைக்கும் வெற்றிகள் சீக்கிரமே மறைந்துவிடும். 9,18, 28திகதிகள் சாதகமான பலன்களைத் தரும் (கூட்டு எண் அத் திகதிகளுக்கு 1 அல்லது 5 வருமானால்)

4,13,22,31 திகதிகள் எதிர்பாராத மாறுதல்களைச் செய்விக்கும். எண்ணுகிறபடி எதுவும் முடியாது. தவிர இத் தினங்களில் ஏதாவது செய்ய வேண்டுமானால் திகதி,மாதம்,வருஷம் மூன்றையும் கூட்டி என்ன எண் வருகிறதென்பதை அறிந்து, சாதகமாக இருந்தால் செய்யலாம்; இல்லையேல் முயற்சியை நீக்க வேண்டும்.

சில சமயங்களில் 4,13,22,31 தினங்களில் நன்மைகள் தானாகவே நிகழும். வழக்கமாகவே 1,10,19,28 திகதிகளிலேயே முக்கிய காரியங்களைச் செய்து வந்தால் அதிர்ஷ்டம் விருத்தியடையும். 4 எண்ணின் பிரதிகூலமான தன்மைகளும் குறையும்.

**துரதிர்ஷ்ட தினங்கள்**

8,17,26 திகதிகள் எப்பொழுதும் தீமையே புரியும். எதிர்பாராத சிரமங்கள் இத் திகதிகளில் வரும். ஆகையால் இத் தினங்களில் முயற்சிகளை விலக்கவும். அப்படிச் செய்து வந்தால் நேரக்கூடிய அநேக துரதிர்ஷ்டங்களிலிருந்து தப்பலாம்.

வெற்றிகரமாக வாழ்ந்த அநேகர் இந்த 8,17,26 திகதிகளில் செய்த காரியங் களால் தான் வீழ்ச்சியடைந்திருக்கின்றனர். ஆகையால் 4 எண்ணின் ஆதிக்கத்தின் கீழுள்ள வாசகர்கள் இது விஷயத்தில் மிக்க விழிப்பாக இருப்பவராக. 7,16 திகதிகளும் சாதகமான நாட்களல்ல.

4 எண்காரர்கள் 1 எண்காரர்களைக் கண்டதுமே வசியமாகிவிடுவார்கள். 1 எண்ணிக்கைக்காரர்கள் 4 திகதிகளில் பிறந்தோரைக் கைப்பொம்மைபோல் ஆட்டலாம். இதேபோல் 4 எண்ணிக்கைக்காரர்களிடம் 8,17,26 திகதிகளில் பிறந்தோர் வசமாவர்.

**வர்ணம்**: வெளிர்நீலம் அல்லது நீலக் கோடுகள் போட்ட துணிகளே இவர்கள் மனதைக் கவரும். பரிசுத்தமான மனம் உடையவர்களாதலால் நீலத்தையே மிகவும் விரும்புவர்.

வெளிர்நீல நிற ஆடைகள் மன சாந்தி தரும். மிக்க அதிர்ஷ்டமான வர்ணம் மஞ்சளே.

**தவிர்க்கவேண்டிய வர்ணம் கறுப்பு**

**இரத்தினம்:** வெளிரான நீல நிறக் கல்லே நன்மைதரும்.பரிசுத்தியையும் காரியசித்தியையும் தரும் கோமேதகமும் மிக்க அதிர்ஷ்டகரமானதே.

**நான்கைக் குறிக்கும் எழுத்துக்களும் அவைகளின் பலனும்**

D. இது நேர்மையான நடத்தை, துணிகரமான செயல்,தீர்மானமான அபிப்பிராயம், சலியாத உழைப்பு,பாதகமான சூழ்நிலைகளையும் லட்சியம் செய்யாமல் உழைத்து வெற்றி காணல், இவைகளைக் குறிக்கிறது. இச் சப்தம் வயிறு,சுவாசகோசம் இவைகளைப் பாதிக்கும். ஆழ்ந்த நீல வர்ண அலைகளால் குறிக்கப்படுகிறது. அலை நீளம் 4.

M. இது புத்திசாலித்தனத்தையும், உழைப்பையும் விடாமுயற்சியையும் குறிக்கும். தீர்மானமான அப்பிராயங்களும் பிடிவாதமும் உண்டு. அடிக்கடி வாழ்க்கையில் மாறுதல்கள் உண்டாகும். அல்லது தொடர்ச்சியாக கவலைகள் இருக்கும்.

பொறுப்பை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏற்றுக்கொண்டால் தானே பிறர் உதவியின்றி எல்லாவற்றையும் செய்வார். அந்தஸ்தும் மேலான பதவியும் உண்டாகும். நுட்பமான அறிவும் ரசிகத்தனமும் இருக்கும். காயாம்பூ நீல நிறம்,சப்த அலை நீளம் 40!

T. இதுவே நான்கு எண்ணிக்கை எழுத்துக்களில் மிக்கபலமானது. இதன் சப்தம் டட! என்று வருவதாகவும்,சூக்ஷமமாகவே கேட்க முடியுமென்றும் வராகி முதலிய யுத்த தேவதைகளின் சப்தமாகவும் கூறப்படுகிறது. இதன் சப்த அலை நீளம் 400. (மனிதர்களின் காதுகளுக்கு 300 வரை நீளமுள்ள அலை ஒலிகளே கேட்கும். ரோஜா முதலிய மலர்கள் மொட்டவிழ்ந்து மலரும்போது நான்கு பீரங்கிகள் வெடிப்பதால ஏற்படும் சப்தம் ஏற்படுகிறதாம். ஆராய்ச்சிக் கருவிகளில் தான் இந்த சப்தம் பதிகிறதே ஒழிய மனிதர்கள் காதில் விழுவதில்லை.

## பண்டிட் ஸேதுராமன்

ஏனெனில் நம்முடைய புலன்கள் அளவுக்கு உட்பட்டே இயங்கும்படி பழக்கப்பட்டு விட்டன). இவ்வெழுத்து விடாப்பிடிவாதத்தையும்,மாற்ற முடியாத தீர்மானங்களையும் குறிக்கிறது. யோசனை நன்றாகச் சொல்லுவார்கள். தீவிரவாதி. இச் சப்தம் ஆழ்ந்த பச்சை வர்ணத்தை சிவப்பாக்கும். இதன் பொருள் கூற முற்படின் மிக விரியும்...

நான்கு எண்ணிக்கைக்காரர்கள் 1 எண் வருகிற பெயரையோ, அல்லது திகதி,மாதம், வருஷம் கூட்டி வருகிற எண்ணிற்குப் பொருத்தமான பெயரையோ வைத்துக் கொள்வது நலம்.

**ஒரு முக்கிய குறிப்பு:** 4 திகதிகளில் பிறந்தவர்களுக்கு மனோவேகம் அதிகம். இதுவே சக்தி ஸ்தூலப் பொருட்களின் புகும்



முதல் எண்ணிக்கையாதலால் இவர்களுக்கு 5,6 முதலிய பின்னால் கவனிக்கப்போகிற எண்ணிக்கைக்காரர்களுக்குஇருப்பதுபோல சரீரத்தில் சக்தி இருக்காது. மனதாலேயே எல்லா சுகங்களையும் ஆழ்ந்த கற்பனையுடன் ரசிப்பார்கள்.

ஆனால் அனுபவிக்கும் போது சீக்கிரம் சலிப்பு ஏற்பட்டு விடும். பணம் சம்பாதிக்கக் கஷ்டப்பட்டு உழைப்பார்கள். அப்படிக் கிடப்பதை நீடித்து வைத்துக் கொண்டு கர்ப்பாற்ற சக்தி இருக்காது. எந்தச் செலவாவது செய்து தொலைத்து முழுகிய பின்தான் நிம்மதி ஏற்படும். ஒரு வஸ்து வேண்டுமென்று நினைத்தால் அது கிடைக்கும் வரை காத்திருக்க பொறுமை இருக்காது. அபிவிருத்தியில் ஆர்வமிருக்குமேயொழிய பாடுபட உடம்பு ஒத்துழைக்காது. பேச்சில் வேகம் இருக்கும். ஆனால் எழுதுதல், நடத்தல் முதலிய கை,கால்களால் செய்யும் காரியங்களெல்லாம் மிக்க நிதானத்துடனே நடை பெறும்.

கொஞ்சம் வசதியிருந் தால் கூட சோம்பேறியாகி விடுவார். பேசுவ தைத் தவிர மற்ற எல்லாம் இவர்களுக்குக் கடினமான காரியங்களே. இவர்களது சரீரம் சுலபமாக வளைந்து கொடுக்கக்கூடியது. சரீரப் பயிற்சிகள் செய்ய மிக்க வசதியானது.

சரீரப் பயிற்சிகளில் ஈடுபட்டால் தான் இவர்களுக்கு சுறுசுறுப்பும் ஜீவசக்தியும் விருத்தியாகும். அதன் பின்னரே இவர்கள் மூளையின் சக்தியைப் பூரணமாக உபயோகப் படுத்திக் கொள்ளமுடியும். மிக்க இளவயதிலேயே சிற்றின்ப எண்ணங்கள் தோன்றும். அவைகளை மட்டுப்படுத்தினால் புத்திப் பிரகாசம் ஏற்படும். (தொடரும்)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தை தடைசெய்ய ஐந்து நாடுகளிடம் அரசு வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஒரு தடை செய்யப்பட்ட நிறுவனம் என பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம கனடா, அவுஸ்திரேலியா, டென்மார்க், பிரான்ஸ் மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற வெளிநாட்டு அரசாங்கங்களுடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு போர் உதவிகள் மற்றும் நிதி உதவிகளை வழங்கி வருவதால் அமெரிக்க அரசாங்கத்தால் அக் கழகத்திற்கு தடை விதிக்கப்பட்டது.

இதனையடிப்படையாகக் கொண்டு சர்வதேச நாடுகள் அனைத்தும் அக்கழகத்திற்கு தடைவிதிக்க வேண்டும் என அமைச்சர் மேற்படி 5 நாடுகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் சர்வதேசத்தில் இயங்கிவரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நாடுகள் அக் கழகத்துடன் கொண்டிருக்கும் தொடர்புகளையும் உடனடியாக நிறுத்துமாறு அமைச்சரின் வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சர்வதேச நாடுகளிலிருந்து திரட்டும் நிதியினை புலிகளின் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு வழங்கிவருவதாகவும் அதனால் அக் கழகத்தை தடைசெய்யவேண்டும் எனவும் வெளி விவகார அமைச்சர் தனது வேண்டுகோளில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

## 13 வயதுக்குட்பட்ட மாணவர் உதைபந்தாட்டப் போட்டிகள்

அகில இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரனையுடன், யாழ் மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்ட போட்டித் தொடரில் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு வைபவமும் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ் . மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவர் 'நடுநிலைச் செம்மல்' கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம் ஜே.பி. தலைமையில் நடைபெற்றன.

ஏ பிரிவில் அராலி சரஸ்வதி வித்தியாலயம், சென்ஜேம்ஸ் ம.வி, தேவரயாளி இந்துக் கல்லூரி ,அருணோதயக் கல்லூரி சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆகியனவும் பி பிரிவில் யாழ் மத்திய கல்லூரிநெல்லியடி ம.ம.வி., மானிப்பாய் இந்துக் கல்லூரி, நாவாந்துறை றோ.க.த.க.பா, மகாஜனக் கல்லூரி ஆகியன கலந்துகொண்டன.

முதலில் இடம் பெற்ற மூன்றாம் இடத்திற்கான தெரிவு ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆடியது. இறுதி நேரத்தில் மகாஜனக் கல்லூரி அணி மதிநுட்பமாய் ஆடி 3:1 என்ற கோல் கணக்கில் வென்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் தேவரயாளி அணியை எதிர்த்து மானிப்பாய் அணி ஆடியது. இரு அணிகளும் கொடுக்கப்பட்ட நேரத்தில் கோல் எதையும் போடாததினால் -சமநிலை உடைப்புஉதைகள்கொடுக்கப்பட்டபோது9ஆவது உதையில் தேவரயாளி அணி ஒரு கோலைப் போட்டு இவ்வருட சம்பியனானது. இவ்வாட்டத்திற்கு நடுவர்களாக சி . சுறேஸ், சி.கனியூட், ஆர்.அகிலநாயகம், ஏ.தமிழ்இனியன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன் கலந்து கொண்டார். யாழ் .மாவட்ட இணைப்பாளர் பேட்டி பனிஸ்டர் போட்டிகளை நெறிப் படுத்தினார் (அ-110)


## டுபாய் ரெலிக்கொம் கேபிள் லைன் உதவியாளர்கள்

(உடனடிப் பயணம்-ஆண்கள்மட்டும்)

சம்பளம் - 800 டினார்

*விதிகளும் நிபந்தனைகளும்*

இரண்டுவருட ஒப்பந்தம். வேலை நேரங்கள் நாள்ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள், வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள். இலவச தங்குமிடம். இலவச மருத்துவம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை:- 18-45. அனுபவமுள்ளவர்கள்/ பயிலுநர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க் காணப்படும் முகவரிக்கு வரவும். மூன்று வாரங்களுக்குள் பயணம். நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை. (ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட் 375, முதலாம் மாடி, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை , (டுப்பிளிகேசன் றோட்) கொழும்பு-3.
தொலைபேசி 0112 370653, 0112 502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இலக்கம்:- ஏஎல்/960/ விளம்பரம்/ 03,05/07.

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்பு கொள்ளவும்.

ரகுபதி-துவாரகா இலத்திரனியல்,
22,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

தொலைபேசி:- 0112 514003

துஷாந்தன் கந்தசாமி,
சூராவத்தை.

தொலைபேசி:-077 3405643,077 5245554

பல்கலைக்கழகங்கள், அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்கள், பூந்தோட்டங்களில் வேலைவாய்ப்பு.

**உபமுகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

(-556)



## டுபாயில் வெற்றிடங்கள் யூ.ஏ.ஈ.-எம்.பி.எம்.கம்பனி

(உடனடிப் பயணம்)

| இல. | தொழில் | சம்பளம் |
|---|---|---|
| 01. | ஆண் சுத்திகரிப்பாளர் | டினார் 600/= |
| 02. | பெண் சுத்திகரிப்பாளர் | டினார் 500/= |

*விதிகளும் நிபந்தனைகளும்*

இரண்டுவருட ஒப்பந்தம். வேலை நேரங்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள், வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள். இலவச தங்குமிடம். இலவச மருத்துவம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை:- 18-45. அனுபவமுள்ளவர்கள்/ பயிலுநர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க் காணப்படும் முகவரிக்கு வரவும். மூன்று வாரங்களுக்குள் பயணம். நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை. (ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட் 375, முதலாம் மாடி, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை , (டுப்பிளிகேசன் றோட்) கொழும்பு-3.
தொலைபேசி 0112 370653, 0112 502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹார்நாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இலக்கம்:- ஏஎல்/960/ விளம்பரம்/ 03,05/07.

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்பு கொள்ளவும்.

ரகுபதி-துவாரகா இலத்திரனியல்,
22,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

தொலைபேசி:- 0112 514003

துஷாந்தன் கந்தசாமி,
சூராவத்தை.

தொலைபேசி:-077 3405643,077 5245554

பல்கலைக்கழகங்கள், அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்கள், பூந்தோட்டங்களில் வேலைவாய்ப்பு.

**உபமுகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

(-556)





பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் நடாத்திய "ஸ்ரீஇராமகிருஷ்ண விஜயம்" நூல்க் கண்காட்சியை அதிபர் ரீ. ஸ்ரீகாந்தா மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் மாணவர்கள் ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயத்தை பார்வையிடுவதையும் காணலாம். (படம்: பரு.நிருபர்)

# கிழக்கு விடுவிக்கப்படவில்லை இராணுவமயமாக்கப்பட்டுள்ளது

## சட்டம் மற்றும் சமூகத்திற்கான அறக்கட்டளை தெரிவிப்பு

இலங்கையின் கிழக்குப்பகுதி விடுவிக்கப்படவில்லை. முற்றிலும் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது என்று சட்டம் மற்றும் சமூகத்திற்கான அறக்கட்டளை என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

கிழக்குப்பிரதேசங்களை பார்வையிட்ட பின்னர் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

படுகொலைகள் ,காணமல் போதல்கள் , கடத்தல்கள் என்பன மேலதிகமாக இராணுவ மயமாக்கப்பட்டிருக்கும் திருகோணமலை மற்றும் மூதூரில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

நலன்புரி மையங்களில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கானோர் போதுமான உணவையும் பாதுகாப்பையும் வேண்டி நிற்கின்றனர். கிழக்கை விடுவித்து விட்டதாக அறிவித்துக் கொண்ட போதும் திருகோணமலை மக்கள் மிக மேலதிகமாக இராணுவ மயமாக்கப்பட்ட ஒரு சூழலில்தான் வாழ்கின்றனர்.

பெரும் தொகையான பாதுகாப்பு படையினர் அங்கு குவிக்கப்பட்டுள்ளபோதும் கடத்தல்களும், காணாமல் போதல்களும் படுகொலைகளும் தொடரவே செய்கின்றன.

திருகோணமலையில் உள்ள மனித உரிமைகள் ஆணையத்தின் புள்ளி விபரங்களின்படி காணாமல் போதல் மற்றும் கடத்தல்கள் என்பன நாளாந்தம் நிகழ்வதாக உள்ளன. ஓகஸ்ட் மாதத்தில் 24 பேரும் செப்ரெம்பரில் 39 பேரும் காணாமல் அல்லது கடத்தப்பட்டுள்ளனர்.

பல சம்பவங்கள் குறித்து உரியமுறைப்பாடுகள் செய்யப்படவில்லை. இரவு 7 மணிக்கு பின்னர் நகரமே வெறிச்சோடிவிடுகிறது.

திருகோணமலையில் துணை இராணுவக் குழுக்களின் அலுவலகங்கள் 10 இல் இருந்து இரண்டாக குறைந்துள்ளபோதும் பொதுமக்கள் சித்திரவதைக்குள்ளாவது தொடர்கின்றது.

2006 ஆம் ஆண்டு ஜனவரியில் 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டது, மூதூரில் 17 அக்சன் பாம் பணியாளர்கள் படுகொலை மற்றும் நந்தரட்ண தேரர் படுகொலை தொடர்பிலான விசாரணைகளில் மனித உரிமைகள் ஆணையம் தலையிட்டபோதும் எதுவித தாக்கமும் ஏற்படவில்லை.

திருகோணமலை நகரைச்சுற்றிப் பல முகாம் கள் உள்ளன. மூதூர், கிளிவெட்டி, பட்டித்திடல்மற்றும் மணற்சேனை ஆகிய இடங்களில் இடைத்தங்கல் முகாம்கள் உள்ளன.

மனித உரிமைகள் ஆணைய புள்ளி விபரப்படி அரசாங்கத்தின் அதிஉயர் பாதுகாப்பு வலய பிரகடனத்தால் உள்ளக அகதிகள்15ஆயிரத்து425பேர் பாதிக்கப்படுவர். இவர்களில் 11ஆயிரத்து672 பேர் இடம்பெயர்ந்து மட்டக்களப்பில் உள்ளனர். அவர்களும் தங்களது நிலங்களை இழக்கவேண்டியிருக்கும். உள்ளக இடம்பெயர்ந்தோருடன் சேவையாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் புள்ளிவிபரங்கள் இதனைவிட மேலதிகமாக இருக்கும். கிளிவெட்டி, பட்டித்திடல் இடைத்தங்கல் முகாம்களில் கழிப்பிட வசதிகள் மிக மோசமாக உள்ளன. திருகோணமலை கலாசார மைய இடைத்தங்கல் முகாமை அரசாங்கம் புறக்கணித்து வருகிறது.

மேலும் அரசபடையினரால் இளம்வயது ஆண்கள் அச்சுறுத்தலுக்கும் சித்திரை வதைகளுக்கும் உள்ளாகின்றனர். உள்ளக அகதிகள் தேசியஅடையாளஅட்டை வைத்திருந்த போதும் பொலிஸாரால் அவர்களுக்கு சிறப்பு அடையாள அட்டை ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதில் இனம்-தமிழ்என்பது பெரிதுபடுத்திக் காட்டப் பட்டும் இருக்கிறது என்று அந்த அமைப் பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

### இராசிபலன்

25.11.2007
(கார்த்திகை 09, ஞாயிற்றுக்கிழமை)
பிரதமை முன்னிரவு 06.43 மணிவரை
ரோகினி முன்னிரவு 11.15 மணிவரை
இராகுகாலம் 04.42-06.12மணிவரை
சுபநேரம் 09.12-10.42 மணிவரை
விநாயகர் விரதாரம்பம்,
விஷ்ணுவாலய தீபம்

| | |
|---|---|
| மேடம் | கடினவார்த்தை, அதிக பிரயாசை, அமைதிக்குறைவு ,பணவிரயம். |
| இடபம் | தெய்வ சிந்தை ,ஜனவசியம் ,புதிய பொருள் சேர்க்கை, உடல் நலம் |
| மிதுனம் | வீண் அலைச்சல், முயற்சி தாமதம், சுபசெலவு,ஆரோக்கியம். |
| கடகம் | கலந்துரையாடல், மனமகிழ்ச்சி, தொழில் சிந்தை, முயற்சி கைகூடும். |
| சிங்கம் | உற்சாகம், தொழில் சிந்தை,முயற்சி கைகூடும் , போசன சுகம். |
| கன்னி | உடல்உழைப்பு, ஆன்றோர் சந்திப்பு, பித்தரோகம், முயற்சி தாமதம். |
| துலாம் | ஆரோக்கிய குறைவு, அபகீர்த்தி, காரிய தாமதம், அச்சம். |
| விருச்சிகம் | வாகன வசதி, உஷ்ண நிலை, காரிய அனுகூலம், குடும்ப சுகம். |
| தனு | திடீர் பயணம், அதிகாரம்,தொழில் சிந்தை, பணப்புழக்கம். |
| மகரம் | தாழ்ந்த சுபாவம்,பூர்வ புண்ணிய கருமம், முயற்சி தாமதம் திடீர் நன்மை. |
| கும்பம் | மனச்சஞ்சலம்,வாகனசுகம், காரிய தாமதம்,சுபசெலவு. |
| மீனம் | புதியபொருள்சேர்க்கை, காரியநண்மை, போசனசுகம், வாக்குமேன்மை. |

வளவன்

### ஈழவேந்தன் மீது நடவடிக்கை இரா.சம்பந்தன் தெரிவிப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் எம்.பி ஈழவேந்தனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத்தலைவர் இரா சம்பந்தன் தெரிவித்தார்.வரவு - செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ள சபைக்கு சமுகமளிக்காமை குறித்தே நடவடிக்கை எடுக்க விருப்பதாக கூறினார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஈழவேந்தன் எம்.பி விடுமுறையில் கனடாவுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

### அடுத்த வருட ஓய்வூதிய கொடுப்பனவு திகதிகள்

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டுக்கான மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவு திகதிகளை மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், தபால் ஆணையாளர், பிரதான கணக்காளர் ஆகியோருக்கு ஓய்வூதியத் திணைக்கள பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஜனவரி | - 10 வியாழக்கிழமை |
| பெப்ரவரி | - 11 திங்கட்கிழமை |
| மார்ச் | - 11 செவ்வாய்க்கிழமை |
| ஏப்ரல் | -09 புதன்கிழமை |
| மே | -08 வியாழக்கிழமை |
| யூன் | - 12 வியாழக்கிழமை |
| யூலை | -10 வியாழக்கிழமை |
| ஓகஸ்ட் | - 12 செவ்வாய்க்கிழமை |
| செப்ரெம்பர் | - 11 வியாழக்கிழமை |
| ஒக்டோபர் | -07 செவ்வாய்க்கிழமை |
| நவம்பர் | - 11 செவ்வாய்க்கிழமை |
| டிசம்பர் | -10 புதன்கிழமை |

### பயங்கரவாதத்தை தோற்கடிக்க பொதுநலவாய அமைப்பு நாடுகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

#### உகண்டா ஜனாதிபதி உரை

பயங்கரவாதத்த முற்றாக ஒழிப்பதற்கும் அபிவிருத்தி பணிகளுக்கும் பொதுநலவாய அமைப்பு நாடுகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று உகண்டா நாட்டு ஜனாதிபதி யுவேரி முசுசிவே தெரிவித்தார். பிரித்தானியாவின் இரண்டாவது எலிசபெத் மகாராணி தலைமையில் இந்த மாநாடு வெள்ளிக்கிழமை காலை அந்நாட்டு நேரப்படி காலை 9.30 மணியளவில் செனோ மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே உகண்டா ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கத்துவநாடுகளின் மக்களை அரசியல், பொருளாதார மனிதவள அபிவிருத்தி நோக்கிய ஆரோக்கியமான நிலை மாற்றத்தில் இட்டு செல்லுதல் என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த மாநாட்டில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொதுநலவாய அமைப்பு நாடுகளில அங்கம் வகிக்கின்ற நாடுகள் ஒரு மொழியில் நடவடிக்கைகளை மேற்கொள்வது விசேடமான அம்சமாகும் என்று சுட்டிக்காட்டிய அவர் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக அமைப்பு நாடுகளின் சக்தி பயன்படுத்திக் கொள்ளப்படவேண்டும் என்றார். (அ-5)

### கல்வி நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்ப அமைச்சர் பிரேம் ஜெயந்த நடவடிக்கை

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. முன்னதாக கல்வி நிர்வாக சேவைக்காக மட்டுப் படுத்தப்பட்ட போட்டி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 475 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன என்று கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராஜா தெரிவித்தார்.

அந்த வகையில் தற்போது உள்ள வெற்றிடங்களை நிரப்பும் முகமாக திறந்த போட்டிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட 250 பேருக்கு அடுத்த வருடம் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நியமனங்கள் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேர்முகப்பரீட்சைகள் ஜனவரி மாதம் ஆரம்பத்தில் நடைபெறுமெனவும் தில்லை நடராஜா தெரிவித்தார்.

இதேவேளை கல்வி நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சைக்கான பெறுபேறுகளை தபால் மூலம் உரிய பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ-6)

### ஐ.சி.சி.தரவரிசையில் சங்கக்கார மூன்றாவது இடத்திற்கு முன்னேற்றம்

சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசைப்பட்டியலில் குமார் சங்கக்கார 3 ஆவது இடத்திற்கு முன்னேறி உள்ளார் இதன்போது அவர் வருடத்திற்கான சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் விருதை வென்ற பாகிஸ்தானின் மத்திய தர வரிசை துடுப்பாட்ட வீரர் முகமட் யூசுப்பை பின் தள்ளியே முன்னேற்றத்தை கண்டுள்ளார். இதற்கு முன்னேற்றம் கண்டுள்ளார் அவுஸ்ரேலியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில்சங்கக்கார முதல்இனிங்ஸில்57 ஓட்டங்களை குவித்த தோடு இரண்டாவது இனிங்சில் அபாரமாக ஆடி 192 ஓட்டங்களைப்பெற்றார். இதனைத் தொடர்ந்து ஐ.சி.சியினால் வெளியிடப்பட்ட புதிய தரவரிசை பட்டியலிலேயே சங்கக்கார இந்த முன்னேற்றம் கண்டுள்ளார். ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசைப்பட்டியலில் அதிக முன்னேற்றம் கண்ட இலங்கை துடுப்பாட்ட வீரராகவும் இதன்மூலம் சங்கக்கார பதிவானார்.

இதற்கு முன்னர் அரவிந்த டி சில்வா, மகேல ஜயவர்த்தன ஆகியோர் முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசை பட்டியலில் 5 ஆவது இடம் வரை முன்னேற்றம் கண்டுள்ளனர். அத்துடன் சங்கக்கார தற்போது துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தர வரிசை பட்டியலில்919 புள்ளிகளை பெற்றுள்ளார். இது இலங்கை துடுப்பாட்ட வீரர் ஒருவர் டெஸ்ட் தரவரிசை ப் பட்டியலில் பெற்ற அதிகூடிய புள்ளிகளாகவும் சாதனை படைத்தது. இதற்கு முன்னர் இலங்கைத் துடுப்பாட்ட வீரர்கள் எவரும் 900 புள்ளிகளை அடைந்த தில்லை. ஐ.சி.சி துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தர வரிசைப்பட்டியலில் ரிக்கி பொண்டிங் 936 புள்ளிகளுடன் முதலாவது இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளார். எனினும் ஒரு புள்ளியை மாத்திரம் குறைவாக பெற்றுள்ள தென்னாபிரிக்காவின் சகல துறை ஆட்டக்காரர் ஜக் கலிஸ் இரண்டாவது இடத்தில் காணப்படுகிறார்.

கலிஸ் அண்மையில் நடந்து முடிந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நான்கு இனிங்ஸிலும் 3சதங்களைப் பெற்றார். அத்துடன் நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடரில் இரண்டு சதங்களை குவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

### தமிழ்ச்செல்வனுக்கு இரங்கல் கூட்டம் நெடுமாறன் தென்னாபிரிக்கா பயணம்

விமானத் தாக்குதலில் வீரமரணம் அடைந்த விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் இரங்கல் கூட்டம் நடத்தி வருகின்றனர். எதிர்வரும் 27 ஆம் திகதிதென்னாபிரிக்காவில் உள்ள டர்பன் மற்றும் ஜெகானஸ் பார்க் நகரங்களில் இரங்கல் கூட்டம் நடக்கின்றது. இதில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். (அ-5)



பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 82- வது அவதார தினவிழா நேற்று முன்தினம் திருநெல்வேலி ஸ்ரீ சத்யசாயி பாபா நிலையத்தில் இடம்பெற்றபோது இளைஞர்களின் வைத்தியசாலை டாக்டர் சிவசங்கர் உரையாற்றுவதையும் பகவான் பக்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சுதாகர்)

# சினிமா துளிகள்

+ 'அபியும் நானும்' படத்தில் ஒப்பனை இல்லாமல்நடிக்கும் திரிஷா இந்தப் படம் வெளிவந்த உடன் தனக்கு தேசிய விருது கிடைக்கும் என்று சகாக்களிடம் போன் மூலம் உற்சாக பானத்தை அருந்தி விட்டு பேசுகிறாராம் .

+ 'வேல்' வெற்றி பெற்ற சந்தோஷத்தில் மிதக்கிறார் சூர்யா. எல்லாம் தியா வந்த ராசி என்று தன் நண்பர்களிடம் கூறி பெருமிதம் அடைகிறார் .

+ 'ஜெயம்கொண்டான்' பட[illegible] வரும் பாவனா தன் சம்பளத்தை 35 இலட்சமாக [illegible] உள்ளாராம்.

+ 'அழகிய தமிழ் மகன்' எதிர்பார்த்த வெற்றியை பெறாத தால் அதிர்ச்சி அடைந்த விஜய் தான் நடித்து வரும் 'குருவி' படத்தின் கதையை மீண்டும் ஒருமுறை கேட்டாராம் .

+ 'பொல்லாதவன்' வெற்றி பெற்றுள்ளதை நம்ப முடியா மல் வெளியூரில் இருக்கும் தனது ரசிக நண்பர்களிடம் போன் போட்டு உறுதி செய்து வருகிறாராம். நாயகனின் இனிய நண்பர் சிம்பு.

+ சேரன் நடித்து வரும் 'பிரிவோம் சந்திப்போம்' படம் பொங்கலுக்கு வெளிவர உள்ளது.

+ உலக நாயகன் கமலின் 'தசாவதாரம்' பொங்கலுக்கு வெளிவருவது பற்றி இன்னும் உறுதி செய்யப்படவில்லை . அநேகமாக ஏப்பிரலில் வெளிவரும் போல் இருக்கிறது.

+ தமிழ் திரையுலகில் தனக்கு எதிரான போக்கு இருப் பதால் மலையாளப் படங்களில் நடிக்க ஆர்வம் காட்டி வருகிறார் நடிகை பத்மப்பிரியா.

+ நயன்தாரா தான் 'கெட்டவனை' காதலித்தது நிஜம் என்றும் ஆனாலும் அந்த 'காதல் அழிவதில்லை' என்று மனம் திறந்து கூறி இருக்கிறார்.

+ 'கெட்டவன்' படத்தில் இருந்து சின்னத்திரை தொகுப் பாளினி நடிகை நீக்கப்பட்டதற்கு அப்பட இயக்குநருடன் நடிகை நெருங்கிப் பழகியதால் தான் என்கிறது நாயகனின் நட்பு வட்டாரங்கள்.

# சினிமா செய்திகள்

## மாதவன் நடிக்கும் 'யாவரும் நலம்'

மாதவன் நடிக்கும் ஒரு புதிய தமிழ் படத்துக்கு ''யாவரும் நலம்'' என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. இந்தப் படம் ஒரே சமயத்தில் தமிழ் - இந்தி ஆகிய மொழிகளில் தயாராகிறது.

அட்லப்ஸ் நிறுவனம் சார்பில் தயாராகும் இந்தப் படத்தில் மாதவன் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக மும்பை அழகி நீத்து சந்திரா நடிக்கிறார்.

இவர் 'கரம் மசாலா', 'டிராபிக் சிக்னல்' ஆகிய இந்தி படங்களில் நடித்தவர் அம்மா வேடத்தில் சரண்யா நடிக்கிறார். இந்தி பதிப்பில சரண்யா வேடத்தில பூனம் தில்லான் நடிக் கிறார்.

புதுமுகங்கள் அமீரா, மதுரா ,அபிஜித் ,சுப்ரியா, த்ரித்மன் சாட்டர்ஜி ,சித்திக் சச்சின், கேட்கர், ரவி பாபு ,மனோஜ் ஜோஷி, தீபக் தொப்ரியல் ஆகியோரும்பங்குபெறுகிறார்கள்.

பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்கிறார். சங்கர், ஏசான், லாய் ஆகிய மூவரும் இணைந்து இசையமைக்கிறார்கள் . கதை திரைக்கதை ,டைரக்ஷன் பொறுப்புகளை விக்ரம் கே. குமார் கவனிக்கிறார்.

இவர் டைரக்டர் பிரியதர்ஷனிடம் உதவி டைரக்டராக இருந்தவர். படத்துக்காக சென்னை எழும்பூர் பகுதியில் ரூ. 45 லட்சம் செலவில்ஒரு நவீன அபார்ட்மெண்ட போல்ஆடம் பரமான அரங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. கதைப்படி, மாதவ னும் அவருடைய குடும்பத்தினரும்அந்த அபார்ட்மெண்டுக்கு புதிதாக குடிவருகிறார்கள்.புது வீட்டில அவகளுக்கு ஏற்படும் திகில் சம்பவங்கள்தான் படத்தின் கதை.

# மாதவன் ஜோடியாக கமல் மகள் ஸ்ருதி



கல்ஹாசனின் மூத்த மகள் ஸ்ருதி, ஹீரோயினாக அறிமுகமாகிறார். கமல்ஹாசன் சரிகாவுக்கு ஸ்ருதி, அக்ஷரா என இரு மகள்கள் உள்ளனர். கமலிடம் விவாகரத்து பெற்ற சரிகா பிரிந்து வாழ்கிறார். இதனால் இரு மகள் களும் சென்னையில் கமலுடன் வசித்து வருகின்றனர்.ஸ்ருதிக்கு இசையில் ஆர்வம் உண்டு. சினி மாவில் பாட ஆசைப்பட்ட அவர், கமல் நடித்த 'தசாவதாரம்' படத்தில் மல்லிகா ஷெராவத் ஆட்டத்திற்கு பாடியுள்ளார். இதனையடுத்து இசை ஆல் பம் உருவாக்கும் முயற்சி யிலும் ஈடுபட்டுள்ளார். இதற்கிடையே ஸ்ருதிக்கு ஹீரோயி னாக நடிக்க அழைப்புக்கள் வந்தன. வெங்கட்பிரபு இயக்கும் 'ஏழு' படத்தில் அவரை நடிக்கக் கேட்டபோது, மறுத்துவிட்டார்.

இந்நிலையில் ,மாதவன் ஜோடியாக ஹீரோயினாக நடிக்க ஸ்ருதி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.சேரன், சினேகா நடிக் கும் 'பிரிவோம் சந்திப்போம்' படத்தைத் தயாரிக்கும் ஞானம் பிலிம்ஸ், அடுத்து மாதவன் ஹீரோவாக நடிக்கும் படத்தை உருவாக்குகிறது.

இப்படத்தை நிஷிகாந்த் காமத் இயக்குகிறார். தற்போது அவர் இயக்கிய 'எவனோ ஒருவன்' படத்தில் மாதவன், சங்கீதா நடித்துள்ளனர். இப்படம் அடுத்தமாதம் ரிலீஸாகும். ஜனவரி மாதம் மாதவன் ,ஸ்ருதி நடிக்கும் காட்சிகள் படமாக்கப்படுகிறது. படத் துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை.



# சினி விமர்சனம்

## பொல்லாதவன்



'பைக்' மீது காதலாக உள்ள ஒரு இளைஞன், அந்த 'பைக்' காரணமாகவே கொலைகாரனாகும் கதை.

பல்சர் வேகத்தில் ஆரம்பிக்கும கதை பரபரப்பும் விறு விறுப்பு மாக பாய்கிறது. தம்மாத்துண்டு உடம்புக்குள் எம்மாம் பெரிய வீரத்தை வைத்திருக்கிறார் என்பதைப் படம் முழுக்க காட்டுகிறார் தனுஷ்

நண்பர்களிடம் தெனாவெட்டு அப்பாவிடம் முரட்டுத்தனம் -அம்மாவிடம் பாசம் - காதலியிடம் குழைவு- எதிரிகளுக்குப் பொல்லாதவன் என வெளுத்துக் கட்டுகிறார் தனுஷ்

காதல் காட்சிகளுக்காக பயன்பட்டிருக்கிறார் திவ்யா ஸ்பந்தனா வில்லன் டேனியல் பாலாஜியின் அட்டகாசம் தலைவிரித்து ஆடுகிறது.எனவே விரைவில் முன்னணிக்கு வரும் வாய்ப்பு உள்ளது.

நகைச்சுவையைப் போலவே குணச்சித்திர கேரக்ரரிலும் பின்னி எடுக்கிறார் கருணாஸ்

சந்தானம் இன்னமும் சத்ததானமாகவே இருக்கிறார்.

மலையாள முரளி -பானுப்ரியா தம்பதியிடம் நடிப்பே தெரியாத அளவுக்கு அப்படியொரு ஒன்றுதல் . பரபரப்பு இல்லாத பயமுறுத்தல் காட்டுகிறார் கிஷோர் குமார்.



ஜி.வி. பிரகாஷ்குமார் இசையில் தேர்ச்சி கூடிக்கொண்டே வருகிறது. 'எங்கேயும் எப்போதும்... படிச்சிப்பார்த்தேன்...' 'நான் அலிபாபா தங்கம்' பாடல்கள் குத்துப் போடுகின்றன. 'நீயே சொல் ....'' மின்னல்கள்....' பாடல்கள் இனிமை.

சந்து பொந்து சாக்கடை முட்டுச்சந்துகளை எல்லாம் அழகாக காட்டுகிறது ஆர். வேல்ராஜ் கமரா . பிருந்தா பரேக்-கின் ஆட்டம் இளசு களுக்கு ட்ரீட் ராம்போ ராஜ்குமாரின் ஜஸ் டெப்போ ஃ பைட் சூப்பர்

நாயகன் பார்வையில் மட்டுமல்லாமல் வில்லனின் பொய்ண்ட் ஆஃப் வியூவிலும் கதை நகர்கிறது.கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்கியிருக்கிறார் வெற்றி மாறன். பெயரின் முதல்பாதி அவருக்கு கிடைத்துவிட்டது.

## கண்ணாமூச்சி ஏனடா



மலேசியாவில் படிக்கும் சந்தியாவைக் கண்டதும் காதல் கொள் கிறார் பிருத்விராஜ். துரத்தி ,துரத்தி காதலித்து சம்மதம் பெறுகிறார். தன் காதல் பற்றி தந்தையும், பொலிஸ் கமிஷனருமான சத்யரா ஜுக்கு தகவல் தருவதுடன்,பிருத்வியையும் இந்தியாவுக்கு அழைத்து வருகிறார் சந்தியா.

ஆனால் காதலை ஏற்காத சத்யராஜ், எப்படியாவது பிருத்வியை துரத்தப் பார்க்கிறார். ஒரு கட்டத்தில் அவரை அவமானப்படுத்தி வெளியேற்றுகிறார். இதனால் குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட மகள் சந்தி யாவும் மனைவி ராதிகாவும் வீட்டை விட்டு வெளியேறுகின்றனர். பிருத்வி - சந்தியா காதல் சண்டையும் சத்யராஜ் - ராதிகா குடும்பச் சண்டையும் சுமுகமாக முடிகிறதா என்பது கிளைமாக்ஸ்.

காதலியை துரத்துவதே காதலன்வேலைஎன்ற களத்துடன்நிறையக்கதைகள் வந்துவிட்டன. அதில் தீபாவளி ஸ்பெஷலாக மகளின் காதலனை துரத்தும் தந்தையின் அட்டகாசத்தையும் களத்தில் இறக்கியிருக்கிறார் இயக்குநர்ப்ரியா.வி.

கோலாலம்பூரில் கதை தொடங்குகிறது.பூணூல் விழாவுக்கு வரமாட்டேன் என்று டாபாய்க்கும் பிருத்வி ,வேகமாக ஓட்டிச் செல்லும் காரின் எதிரில் சட்டெனத் தோன்றி, அதிர்ச்சியை ஏற்படுத்துகிறார் சந்தியா. அவரைக் கண்டதும் மின்னல் போல காதல் வந்துவிட, துரத்த ஆரம்பிக்கிறார் பிருத்வி. அங்கு தொடங்கும் துரத்தல் இந்தியாவுக்கு வந்த பிறகும் சென்னை, ஊட்டி என நீள்கிறது. சந்தியாவின் தந்தை சத்யராஜுக்கு பிருத்வியை பிடிக்காததால் விமான நிலையத்தில் லிப்ட் கொடுத்து பொலிஸ் ஜீப்பில் அழைத்து வரும்போது, யாரையோ திட்டுவதுபோல் அவரை திட்டுவதும் ,அதைக் கேட்டு பிருத்வி அஷ்டகோணலாக அழகு காட்டுவதும் சிரிப்பு. இந்த இருவருக்கும் இடையில் இது வாய்ச்சண்டையாக இருக்கும் வரை ரசிக்க முடிகிறது. பிற்பாதியில் பொலிஸ் கமிஷனராக சத்யராஜை பதிலுக்கு பதில் பிருத்வி தாக்குவதும் சுவற்றில் ஊன்றி எத்தி மிதிப்பதும் சத்யராஜ் ஏற்ற வேடத்தின் கண்ணியத்தைக் குறைக்கிறது.

கிண்டலாகப் பேசுவது, தொங்கலில் விடுவது என்ற பாணியை சற்று மாற்றி நையாண்டி செய்தும் ஆக்ஷன் காமெடி செய்தும் புது இமேஜுக்குள் புகுந்திருக்கிறார் சத்யராஜ். உடன்பிறந்த ஸ்ரீபிரியாவை 'அக்கா' என்று சத்யராஜ் அழைப் பதும் ,அதை ஏற்காமல் 'அண்ணா' என்று சத்யராஜை, ஸ்ரீபிரியா கிண்டல் அடித்து மோதுவதும் சுவாரசியம். ஏற்ற வேடத்தை கட்சிதமாக முடித்திருக்கிறார் ராதிகா. மகள் தைரியம் கொடுத்தும் சத்யராஜ் முன்னால் கதிரையில் உட்கார முடியாமல் எழுந்து சமையல் கட்டுக்கு ஓடுவதும், ஹோட்டல் வளாகத்தில் நின்றபடி ஒரு முறையாவது 'எனக்கு மரியாதை கொடுத்திருக்கிறீர்களா?' என்று அனல் வார்த்தையால் சுடும் நேரத்திலும் இரு கோணங்களில் ஜொலிக்கிறார். பிருத்வியின் காதலை பெற்றோர் ஏற்கும்போது சந்தியா மட்டும் ஏற்க மறுப்பது எதிர்பார்க்காத ட்விஸ்ட். யுவன் சங்கர்ராஜ் இசை பரவாயில்லை. ப்ரிதாவின் ஒளிப்பதிவு இதம்.

# 'விஜய் என் எதிரி அல்ல' நடிகர் அஜீத்குமார் பேட்டி



''விஜய் எனக்கு எதிரி அல்ல நல்ல நண்பர்'' எங்களுக்கிடையே மோதல் எதுவும் இல்லை என்று நடிகர் அஜீத்குமார் கூறினார். நடிகர் அஜீத்குமார் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும் ,அவற்றுக்கு அஜீத்குமார் அளித்த பதில்களும்வருமாறு,

**கேள்வி:-** ''பில்லா'' படம் மீண்டும் தயாரிக்கப்படுவது தொடர்பாக நீங்கள் ரஜினிகாந்தை சந்தித்துப் பேசினீர்களா?

**பதில்:-** ஆமாம் இந்த படம் தொடங்குவதற்கு முன்பு நான் அவரை சந்தித்து பேசினேன் . அவருடைய ஆசீர்வாதத்துடன், அவர் சம்மதம் பெற்ற பிறகே'' பில்லா'' படம் தொடங்கப்பட்டது. இதற்காக அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கேள்வி:-** ஒரு சூப்பர் ஸ்டார் நடித்த படத்தில் நீங்கள் மீண்டும் நடிப்பது உங்களை ஒரு சூப்பர் ஸ்டார் என்று காட்டிக்கொள்வதற்காகவா?

**பதில் -** நிச்சமாக அப்படி இல்லை. எனக்கு மட்டுமல்ல இப்போதுள்ள எல்லா நடிகர்களுக்கும் ரஜினி -கமல் தான் 'ரோல் மாடல்' சமீப காலமாக தயார் ஆகும் புதிய படங்களுக்கு பழைய படங்களின் பெயர்களை சூட்டுகிறார்கள். பழைய படங்களையே மீண்டும் தயாரிக் கிறார்கள். இந்த ஐடியா எனக்கு 3 வருடங்களுக்கு முன்பே தோன்றியது. சில தயாரிப்பாளர்களிடம் இது பற்றி நான் கலந்து ஆலோசித்து இருக் கிறேன். ஆனால் யாரும் அப்போது பழைய படங்களை மீண்டும் தயாரிக்க முன்வரவில்லை. இந்தி நடிகர் ஷாருக்கான் முந்திக்கொண்டார். அமிதாப்பச்சன் நடித்த டான் படத்தில் ஷாருக்கான் மீண்டும் நடித்தார்.

**கேள்வி:-** இப்போது தாயாராகும் ரீமேக் படங்கள் திரையுலகின் வளர்ச்சியைக் காட்டுகிறதா?

**பதில்:-** இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியாது . எஸ் .ஜே. சூர்யா நடித்த ஒரு படத்தில் 'தொட்டால் பூ மலரும்' என்ற பழைய பாடலைப் பயன்படுத்தினார்கள் .படத்தின் வெற்றிக்கு அந்தப் பாடலும் ஒரு காரணமாக அமைந்தது. பழைய பாடல்களையே திரும்ப பயன்படுத்துவது போல் பழைய படங்களையும் 'ரீமேக்' செய்தால் என்ன? என்ற ஐடியா அதன் பிறகே வந்தது.

**கேள்வி:-** விஜய்க்கும் உங்களுக்கும் இருந்த மோதல் தீர்ந்துவிட்டதா?

**பதில்: -** நானும் விஜயும் என்றைக்குமே எதிரிகளாக இருந்ததில்லை. எங்களுக்கிடையே போட்டி இருக்கிறது. ஆனால் மோதல்இல்லை. தனிப்பட்ட முறையில்எங்களுக்குள் எந்த விரோதமும் இல்லை. நாங்கள் எதிரிகள் கிடையாது நண்பர்கள் .

**கேள்வி:-** 'பில்லா' படத்தில் உங்களுடன் நடித்த நயன்தாரா ,நமீதா பற்றி என்ன சொல்கிறீர்கள்?

**பதில்:-** தொழில் ரீதியாக இருவரும் நல்ல நடிகைகள் .

**கேள்வி:-** தேசிய விருதை குறிவைத்து ஒரு படத்தில் நடிப்பீர்களா?

**பதில்:-** அப்படி திட்டமிட்டு படம் செய்யும் எண்ணம் இல்லை. நல்ல கதைகளில் மட்டுமே நடிக்க விரும்புகிறேன்.

**கேள்வி -** உங்களின் ரோல் மாடல் யார்?

**பதில் -** என் பெற்றோர்கள் ரஜினிகாந்த் ,கமலஹாசன்.

**கேள்வி:-** உங்கள் பேச்சில் ஒரு நிதானம்தெரிகிறதே?

**பதில்:-** பக்குவம் தான் அந்தந்த வயதுக்கு ஏற்ப எல்லோருக்கும் ஒரு பக்குவம் வரும் அல்லவா அந்த பக்குவம் தான் எனக்கு இப்போது வந்திருக்கிறது. இப்போது எனக்கு 36 வயதாகிறது. இன்னும் 10 வருடங்கள் கழித்து மேலும் பக்குவம்வந்துவிடும்.

**கேள்வி:-** நீங்கள் அப்பா ஆக போவது பற்றி?

**பதில்:-** ஷாலினியும்பிறக்க போகிற குழந்தையும் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் . அதுதான் என் பிரார்த்தனை.

**கேள்வி:-** கார் பந்தயங்களில்மீண்டும் கலந்து கொள்வீர்களா?

**பதில்:-** அதை டி.வி.யில் பார்ப்பதுடன் சரி. மீண்டும் கலந்து கொள்ளும் எண்ணம் இல்லை.

இவ்வாறு அஜீத்குமார் கூறினார்.

# தவறுதலாக செய்யப்பட்ட சத்திர சிகிச்சையால் ஒருவர் உயிரிழப்பு மற்றவர் உடல் செயலிழப்பு

தன்சானியாவில் பெயர் குளறுபடி காரணமாக தவறுதலாகச் செய்யப்பட்ட சத்திர சிகிச்சையால் ஒருவர் உயிரிழந்துள்ளார். மூளையில் ஏற்பட்ட கட்டிக்கு சத்திர சிகிச்சை செய்வதற்காக சென்ற 19 வயதான இம்மானுவேல் -இன்காயாவுக்கு முழங்காலில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை முழங்காலில் சத்திர சிகிச்சைக்காகச் சென்ற 20 வயதான இம்மானுவேல்-டயசிற்க்கு தலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மானுவேல் என்ற முதற் பெயரே இருவருக்கும் இருந்ததினால் தவறான சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கும் அரசாங்கம் இதற்கு மன்னிப்புக் கோரியிருக்கின்றது.

உரிய நேரத்தில் மூளையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படாததால் இம்மானுவேல் இம்காயா மீண்டும் சத்திர சிகிச்சை நடைபெற்று, இரு வாரங்களின் பின் உயிரிழந்துள்ளார். அத்துடன் தவறுதலாக மூளையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட இம்மானுவேல் டயசின் உடலில் வலப்பாகம் செயலிழந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# 10 இலட்ச ரூபா ஐஸ்கிரீம்!



ஒரு ஐஸ்கிரீம் அதிகபட்சம் எவ்வளவு விலை இருக்கும்? ஐந்நூறு ரூபா அட, ஆயிரம் ரூபா?

அமெரிக்காவின் நியூயோர்க் கில் தயாரிக்கப்பட்டிருக்கும் ஒரு ஐஸ்கிரீமின் விலை, மூச்சைப் பிடித்துக் கொள்ளுங்கள் 10 இலட்சம் ரூபா.

உலகத்திலேயே மிகவும் விலை உயர்ந்த ஐஸ்கிரீம் என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது இந்த ஐஸ்கிரீம் அடேங்கப்பா.

புரோசன் ஹொட் சொக்லேட் என்ற இந்த ஐஸ்கிரீம் கடந்த 7 ஆம் திகதியன்று நியூயோர்க்கின் பிரபல உணவு விடுதியான செரன்டிபிட்டி-3 இல் அறிமுகம் செய்யப்பட்டது. யூபோரியா நியூயோர்க் என்ற முன்னணி நகைக் கடையுடன் இணைந்து இந்த ஐஸ்கிரீமைத் தயாரித்திருக்கிறார்கள். ஐஸ்கிரீமின் மீது தூவப்பட்ட சாப்பிடக் கூடிய மெல்லிய தங்க இழைகளை இந்த நகைக் கடை நிறுவனத்தினர் தயாரித்து அளித்திருக்கிறார்கள். மேலும் உலகின் விலை உயர்ந்த 28 கொக்கோ கலவைகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஐஸ்கிரீமில் சேர்க்கப்பட்டுள்ள மற்றொரு சேர்மானமான லா மெடிலின் ஆடி டிராபிள் இன் நிலையும் ரொம்பவும் அதிகம். தங்க ஸ்பூனுடன் வெள்ளை மற்றும் சொக்லேட் நிற வைரங்களுடன் அலங்கரிக்கப்பட்டு இந்த ஐஸ்கிரீம் வழங்கப்படும். சாப்பிட்ட கையோடு தங்கப் ஸ்பூனையும், வைரங்களையும் வீட்டுக்கு எடுத்துச் சென்று விடலாம். ஆனால் எத்தனை பேர் இந்த காஸ்ட்லி ஐஸ்கிரீமை சாப்பிட்டார்கள் என்று தெரியவில்லை. அப்படியே சாப்பிட்டவர்களுக்கும் செரிமாணம் ஆனாதா என்று ம் தெரியவில்லை.

# பருவ நிலை மாற்றத்தால் பண்டா கரடிகள் பாதிப்பு



பண்டா கரடியை பிடிக்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. 'கொழு கொழு' என உடம்பு. 'மொசு மொசு' என முடிஎன்று பார்ப்பவரை கவர்பவை பண்டாக் கரடிகள். சினாவில் உள்ள சிச்சுவான் பகுதியில் ஏராளமான பண்டாக் கரடிகள் வசித்துவருகின்றன.

அங்கு 2 இலட்சத்து 17 ஆயிரம் சதுர மைல்கள் பரப்பளவில் வளர்ந்துள்ள மூங்கில் மரங்களே இவற்றின் உணவுக்குஆதாரம். ஆனால் அப் பகுதியில் தொடர்ந்து காடுகள் அழிக்கப்பட்டு வருவதாலும் பருவநிலை மாற்றங்களாலும் பண்டாக் கரடிகள் பலத்த பாதிப்பை சந்தித்து உள்ளன. அங்குள்ள மூங்கில்கள் அறுபது வருடங் களுக்கு ஒரு முறை பட்டுப்போகும். மீண்டும் அவை துளிர்க்க 12 வருடங்கள் ஆகும். தற்போதுள்ள மூங்கில்கள் பட்டுப்போய் புதிய மூங்கில்கள் துளிர்க்க இருக்கின்றன. இதனால் உணவு கிடைக்காமல் பண்டாக்கரடிகள் இறந்து வருகின்றன. கிட்டத்தட்ட ஆயிரத்து இருநூறு பண்டாக்கரடிகள் உணவு தேடி காடுகளை விட்டு வெளியே திரிகின்றன. எனவே இவற்றைக் காப்பதற்கான வழிமுறைகளை சீன அர சு யோசித்து வருகின்றது. (அ-5)

# குண்டானவர்களுக்கு இன்னொரு சோதனை



தங்கள் உடலை தாங்களே சுமக்க முடியாமல் சுமந்து திரிவது நோயாளர்களின் தாக்குதலுக்குளிதில்ஆளாகும் அபாய வலயத்திற்கு உட்பட்டவர்களாக இருப்பது மற்றவர்களின் கேலிப்பார்வைக்கு ஆளாவது என 'தளுக்கொளுக்' என்று இருப்பவர்கள் சந்திக்கும் சோதனைகள் ஏராளம். அவர்களுக்கு இன்னொரு சோதனையும் வந்துவிட்டது. விமானத்தில் பறக்கும் குண்டு நபர்கள் தங்கள் கூடுதல் எடைக்கு ஏற்ப கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை வரக்கூடும் என்று கூறப்படுகிறது. அவுஸ்திரேலியா விமானசேவை நிறுவனங்கள் இது குறித்து பரிசீலிக்கத் தொடங்கிவிட்டன.

குண்டானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் அதில் எரிபொருளின் கிடுகிடு விலை உயர்வும் தான் விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் இதுபோல யோசிக்க காரணம் என்று கூறப்படுகிறது. அது பற்றிய தகவல் வெளியானதுமே ஆதரவு எதிர்ப்பு என்று இரு அணிகளாக பிரிந்து விட்டார் கள். விமானப் பயணிகள்.

'உடல் எடை அடிப்படையில் பயணிகளை பாகுபடுத்துவதா இது அநியாயம்' என்று குண்டு ஆசாமிகள் குரல் கொடுக்க இப்போது விமானங்களில் அனுமதிக்கப்பட்ட எடைஅளவை விட கூடுதலாக பொருட்களை கொண்டு செல்பவர்கள் கூடுதல் கட்டணம் செலுத்தவேண்டியிருக்கிறது. அதைப் போல ஓர் அளவுக்கு மேல் குண்டானவர்கள் கூடுதல் கட்டணம் செலுத்துவது நியாயம் தானே? என்று 'ஒல்லியானவர்கள் நியாயம் பேசுகிறார்கள்.

குண்டானவர்களால் சகபயணிகளுக்கு அசௌரியம், நீளமான கூடுதல் சீட்பெல்ட் வழங்குவது என்ற விமானப்பயணிகளுக்கும் அதிகரிக்கும் வேலைப்பளு, எல்லாவற்றையும் பார்த்தால் இதை எதிர்ப்பது சரியல்ல என்று தோன்றும் என்றும் அநியாயம் கூறுகிறார்கள். நமது கோயில் பலவற்றில் நேர்த்திக் கட்னாக எடைக்கு எடை பொருட்கள்செலுத் துவதும்வழக்கம்உண்டு. அதைப் போல தங்கள் எடைக்கு எடை கட்டணம் செலுத்த வேண்டி வந்துவிடுமோ என்று வயிறு கலங்கிப் போயிருக்கிறார்கள் மிஸ்டர் அன்ட் மிசிஸ் குண்டுகள். (அ-5)

## உலக தரிசனம்

# பனி சிற்பங்கள்




பனியே அழகு தான். அதுவும் சூரியன் உதிக்கும்போது புல் தரையில் மினுமினுப்பதை பார்ப்பது அழகோ அழகு.

அந்தப் பனியிலேயே சிற்பங்கள் செய்து கலக்குகிறார்கள் கலைஞர்கள். மிக நுணுக்கமான, கவனமாக செய்யவேண்டிய விஷயம் இது. இருந்தாலும் பூ, இலை, ஆண், பெண் என பலவித உருவங்களையும் அட்டகாசமாக பனியிலேயே கொண்டு வந்து விடுகிறார்கள் சிற்பிகள்.

இப்படி பனியில் தயாரான சிற்ப திருவிழா பெல்ஜியத்தின் ப்ருக்ஸ் நகரில் நடைபெற்றது. இதில் ஏராளமான சிற்பிகள் தங்கள் கைவண்ணத்தைக் காட்டினர். படத்தில் இருப்பது அந்த சிற்பங்கள் தான். (5)

# கப்பல் பனிப்பாறையுடன் மோதல்



லிபியாவைச் சேர்ந்த பயணிகள் சொகுசுக் கப்பல் எம்வி எக்ஸ்ப்ளோரர் இது. சிலிநாட்டின் அருகே அண்டார்டிகா கடலில் கிங் ஜார்ஜ் தீவுப் பகுதியில் வந்தபோது பனிப் பாறையில் மோதியதால் மூழ்கத் தொடங்கிவிட்டது.

தகவல் கிடைத்ததும் சிலி கடற்படை மீட்புக் குழுவினர் விரைந்து சென்றனர். கப்பலில் இருந்த 100 பயணிகள், 54 ஊழியர்கள் கடலில் தற்காப்புப் படகுடன் குதித்துவிட்டனர்.

அவர்களை மீட்புக் குழுவினர் மீட்டு கரைக்கு பத்திரமாக அழைத்துச் சென்றனர். பயணிகளை எங்கே அழைத்துச் செல்வது என்பது பற்றி சிலி நாட்டு அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர். (5)

# பலூன் அரக்கன்



கார்ட்டூன் கதாபாத்திரமான ஷ்ரக் எனப்படும்அரக்கனைப் போன்ற உருவ பலூன் மேலே பறக்க, கீழே கையில்அதன்நூலை பிடித்தபடிநடந்து செல்கிறார்கள் அமெரிக்கர்கள்.

நியூயோர்க் நகரில்தான் இந்தக்காட்சி. அங்கு வருடாந்திர நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில்தான் இந்த ராட்சத பலூன் பறக்கவிடப்பட்டு உள்ளது. தொடர்ந்து81 ஆவது ஆண்டாக இந்த நிகழ்ச்சி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (5)


# ஆமை முட்டை அறுவடை



பசுபிக்பெருங் கடலின்கோஸ்டாரிகா கடற்கரைப் பகுதிகளில் அரிய ஆலிவ்ரிட்லிவகை கடல் ஆமைகள் முட்டையிடும் சீசன் இது. ஆண்டுக்கு ஒருவாரத்தில் மட்டும் கடற்கரை மண லுக்கு சத்தம் போடாமல் ஆமைகள் வரும்.

மணலைத் தோண்டி முட்டையிட்டுத் திரும்பும் இந்த சீசனில் ஆமைகள் இடும் முட்டைகள் சுமார் 10 கோடி இருக்கும். அரிய வகை ஆமை முட்டைகளை வேட்டையாடத் தடை இருந்தாலும், 10 இலட்சம் முட்டைகளை மட்டும் சேகரித்து விற்பனை செய்ய கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அரசு அனுமதி அளிப்பதுண்டு. இந்த ஆண்டு முட்டை வேட்டைக்கு கோஸ்டாரிகா அரசு அனுமதி அளித்துள்ளதால், முட்டைகளை இந்தப் பெண்கள் சேகரிக்கின்றனர். (5)

# மனிதனை விட உயரமான கடல் தேள் உயிர் வாழ்ந்ததற்கான ஆதாரம் கிடைத்தது



எட்டு அடி நீளமுள்ள பிரமாண்டமான கடல் தேள் இந்தப் பூமியில் ஒரு காலத்தில் வாழ்ந்துள்ளது. அதற்கான ஆதாரமாக, அந்த தேளின் கொடுக்கின் புதை படிவம் கிடைத்துள்ளது.

பிரிட்டனில் உள்ள பிரிஸ்டோல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் டாக்டர் சிமோன் பிராடி என்பவர் கூறியதாவது, ஜேர்மனியில் பிரம் என்ற இடத்தில் உள்ள சுரங்கத்தில் பிரமாண்டமான தேளின் கொடுக்கின் புதை படிவம் கிடைத்துள்ளது.

கொடுக்கின் நீளம் மட்டும் 40 செ.மீ கொண்டது. இதையடுத்து அந்த தேள் எட்டு அடி உயரம் கொண்டதாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இவ் வகை தேள்கள் கடலில்வாழ்பவை 39 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய காலத் தை சேர்ந்தவை. டைனோசரஸ் காலத் துக்கு முந்தியவை.

பழங்காலத்தில் இராட்சத உருவம் கொண்ட பூரான், தேள், கரப்பான் பூச்சி, தட்டாரபூச்சி போன்றவைவாழ்ந்து இருக்க கூடும் என்ற நம்பிக்கை சராசரி மனிதனை விட, பழமையான தேள் மிகவும் உயரமானது. பிரமாண்டமான தேள் கொடுக்கின் புதை படிவத்தை மார்க்கன் போஸ்மான் என்ற ஆய்வாளர் உட்பட சிலர் கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வகை தேள்கள் 'கேனிபல்ஸ்' என்ற சொந்த இனத்தையே தின்னும் உயிரி னத்தை சேர்ந்தவை. பல கோடி ஆண்டுகளுக்கு முன் வளி மண்டலத்தில் ஒட்சிசனின் அளவு அதிகமாக இருந்து இருக்கும்.

அது இது போன்ற உயிரினங் கள் பிரமாண்டமாக வளர வழி வகை செய்து இருக்கும்.

அல்லது தங்களின் எதிரிகளிடம் இருந்து காப்பாற்றிக்கொள்ள தேவையானஉடல் உறுப்புக்களை காலப் போக்கில் அவை பெற்று இருக்கும்.

இது கூட பிரமாண்டமான தேள்கள் உரு வெடுக்க காரணமாக இருந்திருக்கக் கூடும். பிரமாண்டமான தேள்கள் உருவாக என்ன கார ணம் என்பதில் விஞ்ஞானிகளிடம் இது போன்ற இரு வேறு மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. இன்னும் தெளிவான கருத்து கிடைக்கவில்லை இவ்வாறு சிமோன் பிராடி கூறினார். (5)

# அதிர வைக்கும் குதிரையேற்றம்



(பாரீஸ்)

குதிரையேற்றப் போட்டிக்குப் பயிற்சி அளிப்பதற்கென ஸ்பெயின் உட்பட பல நாடுகளில் சிறப்புப் பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன.

பிரான்ஸ் தலைநகர் பாரீசில்நேற்று முதல்மூன்று நாட்களுக்கு ஐரோப்பிய குதிரையேற்றப் பயிற்சி மையங்களுக்கு இடையேயான குதி ரை சாகசப் போட்டிகள் நடக்கின் றன. அதில் கலக்க வந்துள்ள வியன் னாவைச் சேர்ந்த பயிற்சி மைய வீரர்கள் ஒருகுதிரையுடன் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். (அ-5)

சிங்காசனம் என்பது ஒரு பாம்புப் புற்று அதன் மீது அமர்வோரை எந்த நேரத்திலும் புற்றிலிருந்து கிளம் பும் பாம்பு தன் விஷப் பற்களால் கடித்துக் கொல்லும்.
- அறிஞர் அண்ணா

வலம்புரி

# பாகிஸ்தானுக்கு நேர்ந்த கதி இலங்கைக்கும் நேரலாம்

பொதுநலவாய அமைப்புக்களில் இருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் கடந்த சில வருடங்களாக அதிபர் முஷாரப்பின் கொடூர ஆட்சி ஜனநாயகத் தன்மையை முற்றாக சீரழித்து விட்டது.

இராணுவத் தளபதியாகவும், நாட்டின் அதிபரா கவும் இருக்கும் முஷாரப்பின் மனிதநேயமற்ற கொடூரத் தன்மையினால் அந்நாட்டில் தினசரி குண்டுவெடிப்பும்,மனிதப் படுகொலைகளும் நடந்த வண்ணமுள்ளன.

நீதிபரிபாலனம் முடக்கப்பட்டுள்ளது. இராணு வத் தளபதியாக இருந்து கொண்டு நாட்டின் அதி பராக பதவியேற்பதற்கு பாகிஸ்தான் உயர் நீதிமன் றம் எதிர்ப்புத் தெரிவித்தமைக்காக நீதிபதிகளை கைது செய்து அவர்களை தடுத்துவைக்கும் அள விற்கு அங்கு அநீதி தாண்டவமாடுகின்றது.

அமெரிக்கா போன்ற நாடுகள் முஷாரப்புக்கு ஆலோசனை வழங்கியிருந்தும் அவர் அதனை ஏற்பதாக இல்லை. இந்நிலையில் பாகிஸ்தானில் தோன்றியுள்ள பதற்ற சூழ்நிலையின் மத்தியில் அந்நாட்டை பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்குவதென்ற முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த முடிபை, இலங்கை கண்டித்திருப்பது ஒத்த இயல்புடையோருக்கு ரோசம் வருவதை வெளிக்காட்டுவதாக அமைகின்றது.

பாகிஸ்தான் தொடர்பில் பொதுநலவாய அமைப்பு எடுத்த முடிபு சரியானதும் பொருத்தமா னதுமாகும். ஜனநாயகப் பண்புகளை பாதுகாக்கத் தவறுகின்ற நாடுகள் மீது இத்தடை நடவடிக்கை களை எடுக்கத் தவறுகின்றபோது அந்த நாடுகள்– ஆட்சியாளர்கள் தமது செயற்பாடுகளை நியாயப் படுத்த முற்படுவர்.

எனவே பாகிஸ்தான் விடயத்தில் பொதுநல வாய அமைப்பு சரியான தீர்வை எடுத்துள்ளது.

பாகிஸ்தானை நீக்குவதற்கான வாக்கெடுப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம ஆதரவாக வாக்களித்துள்ளார். வெளிவிவகார அமைச்சரின் இச்செயற்பாடு பாராட்டுக்குரியது.

எனினும் இலங்கை ஜனாதிபதி உட்பட அமைச் சர்கள் பொதுநலவாய அமைப்பிலிருந்து பாகிஸ் தானை நீக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள் ளனர். இந்த எதிர்ப்பு பொதுநோக்குடையதல்ல.

மாறாக, பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு வசதியாகவும் –பாகிஸ் தானுக்கு நேர்ந்த கதி இலங்கைக்கு நேரக்கூடாது என்பதற்காகவுமே மேற்படி எதிர்ப்பினை இலங்கை தெரிவித்துள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் இராணுவத் தள பதியாக இலங்கைக்கு வருகை தந்துவிட்டு நாடு திரும்பிய முஷாரப் ஆட்சிக் கவிழ்ப்பை மேற் கொண்டிருந்தார்.

இவ்வாறு இலங்கைக்கு வந்துவிட்டுச் சென்ற முஷாரப் பாகிஸ்தானில் ஆட்சிக் கவிழ்ப்பை மேற் கொண்டிருந்தமை அப்போது பரபரப்பாக பேசப்பட்ட விடயமாக இருந்தபோதிலும், முஷாரப்பின் ஆட் சிக் கவிழ்ப்பிற்கும் இலங்கைக்குமிடையில் தொடர் புகள் ஏதேனும் உண்டா? என்ற ஆராய்ச்சிகள் அப் போது ஏற்படவில்லை.

ஆனால் இப்போது முஷாரப்பின் அவசரகாலப் பிரகடனம் மற்றும் நீதிபதிகளைக் கைது செய்தல் போன்ற நிகழ்வுகளையும் அந்த நிகழ்வுகளுக்காக பொதுநலவாய அமைப்பிலிருந்து பாகிஸ்தானை விலக்கியதற்காக இலங்கை கண்டிப்பதையும் பார்க்கும்போது இருதரப்பிற்கும் தொடர்புகள் ஏதே னும் இருக்கலாமா? என்ற சந்தேகம் எழுவது நியா யமானதே.

# ஐ.தே.கவே தொடர்ந்து பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் ஜே.வி.பி. அதனை பிடிக்க ஒருபோதும் அனுமதியோம்

## ஐ.தே.க ஜனநாயகக் குழு உறுப்பினரும் அமைச்சருமான மஹிந்த விஜயசேகர

ஐக்கிய தேசியக் கட்சியே தொடர்ந்தும் பிரதான எதிர்க் கட்சியாக இருக்கும் . இனவாதத்தைக் கக்கிக் கொண்டிருக்கும் ஜே.வி.பி.யை எதிர்க் கட்சியாக நிலைநிறுத்த ஒருபோதும் அனும திக்கப்போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாய கக் குழு உறுப்பினரும் அமைச்சருமான மஹிந்த விஜயசேகர தெரிவித்தார்.

நாடு இக்கட்டான நிலையில் உள்ளபோது அது பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்வது பொருத்தமானதாக அமையாது. எனவே வரவு –செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் வாக்கெடுப்பிலும் எமது பூரண ஆதரவு அரசுக் கு உள்ளது. என்று ம் அவர் கூறினார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள ஐ.தே.க.வின் மாற்றுக் குழு அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த விஜய சேகர மேலும் கூறியதாவது,

வரவு –செலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்களிப்பில் ஐக்கிய தேசியக் கட்சி மாற்றுக்குழுவின் பதி னேழு பாராளுமன்ற உறுப்பினர்களும்ஆதரவாக வாக்களித்து அதனை வெற்றி பெறச்செய்தோம். அதேபோன்று மூன்றாவது வாசிப்பின் மீது எதிர்வரும 14 ஆம் திகதி நடைபெறவுள்ள வாக் கெடுப்பின்போதும் அரசாங்கத்திற்கு எமது பூரணஆதரவை வழங்கவுள்ளோம்.

இதில் எந்த மாற்றமும் இல்லை. அத்துடன் பெரும்பான்மை வாக்குப்பலத்துடன் வரவு – செலவுத் திட்டம் வெற்றி பெறுவதும் உறுதியாகியுள்ளது. இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மேலும் சில உறுப்பினர்கள் எம்மிடம் இணைந்து கொள்ளும் முயற்சியில் உள்ளனர். இது நல்ல முடிவுதான் ஆனாலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கூடுதலான உறுப்பினர்களை நாம் உள்வாங்கிக் கொள்வதன் மூலமாக அக்கட்சியின் பலம் மேலும் நலிவடையும் நிலைக்கு தள்ளப் பட்டு விடுவதுடன் அதை எதிர்க்கட்சி அந்தஸ்தையும் இழந்து விடக்கூடிய சந்தர்ப்பங்களும் கிட்டிவிடும்.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் இனவாதக் கட்சியாக தம்மைக்காட்டிக் கொண்டுள்ள ஜே.வி.பி .எதிர்க்கட்சியின் இடத் தைப்பிடிக்கும் அளவு முன்னேறிவிடவும் கூடும். இனவாதத்தை அள்ளி வீசிக்கொண்டிருக்கும்ஒரு கட்சியை எதிர்க் கட்சியாக அமைப்பதில் எமக்கு துளி அளவும் எண்ண மில்லை. எனவே ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து உறுப்பினர்கள் எம்மிடம் இணைந்துகொள்வதைக் கட்டுப்படுத்துவதன்மூலம் அக்கட்சி யே பிரதான எதிர்க்கட்சியாக இருப்பதற்கான சந்தர்ப்பத்தை யும் வழங்கியுள்ளோம்.

அனைத்துக் கட்சிகளையும் விட இனவாதத்தில் ஒரு வித்தி யாசமான போக்கைக் கடைப்பிடித்துவரும் ஜே.வி.பி எதிர்க்கட்சி யாக மாறுவதற்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. இதற்காகவே எம்மோடு இணைய உள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தியுள்ளோம் அதேநேரம் எமது மாற்றுக்குழுவில் உள்ள 17பேரில் எவர் ஒருவரும் எந்த சந்தர்ப்பத்திலும் ஐ.தே.க வுடன் இணைந்து கொள்ளும் சந்தர்ப்பங்களும் இல்லை. (அ-5)

# பொதுநலவாய நாடுகளின் அமைப்பிலிருந்து பாகிஸ்தானை விலக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் கவலையளிக்கிறது

## கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பில் இருந்து பாகிஸ்தானை விலக் குவதற்கு அமைப்பின் அமைச்சர்கள் எடுத்த தீர்மானம் மிகுந்த கவலையளிப்பதாக பாகிஸ்தான் தெரிவித்து ள்ளது.

பாகிஸ்தானின் நிலைவரத்தில் ஏற்பட்டு வரும் முன்னேற் றங்களை கவனத்தில் கொள்ளாமல் எடுக்கப்பட்ட முடிவு என பாகிஸ் தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஜனநாயகத்தை மீள ஏற்படுத்துவதற்கு பாகிஸ் தான் அரசாங்கம் முழுமையாக ஈடுபட்டுள்ளது. நாட்டில் ஏற்பட் டுள்ள உள்ளக பிரச்சினையை கடடுப்படுத்துவதற்கும் அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டியுள்ளது.

தற்போது நிலைமைகள் சீரடைந்து வருகின்றது. சுதந்திர மா னதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்காக நடு நிலையான காபந்து அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மாகாண, தேசிய ,தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் திணைக் களம் விடுத்துள்ளது.

பாகிஸ்தான் நிலைவரம் தொடர்பாக நாட்டுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரடியாக அவதானித்த பின்னர் இத் தேர்தலை நடத்துமாறு பாகிஸ்தான் உறுப்பு நாடுகளைக் கோரியிருந்தது.

இந்நிலையில்பாகிஸ்தானை பொதுநல வாய அமைப்பிலி ருந்து நீக்குவ்தற்கு எடுத்த தீர்மானம்நீதியற்றதும் பொருத் தமற்றதுமாகும். (அ-5)

# மனைவி சுட்டுக்கொலை இராணுவ அதிகாரி கைது

புத்தளத்தில் மனைவியை சுட்டுக்கொலை செய்ததாக இராணுவ அதிகாரி சந்தன ரூபசிங்க கைதுசெய்யப்பட்டுள் ளார். மகோலப் பகுதி தெவலே வீதியில்உள் ள வீட்டில் சந்தன ரூபசிங்கவின் மனைவி திஜாங்கனி ரூபசிங்கவை (வயது 37) வெள்ளிக்கிழமை அதிகாலை ரூபசிங்க துப்பாக்கியால் சுட்டதாக சபுகஸ்கந்த பொலி ஸார் தெரிவித்துள்ளனர். அதன்பின்னர் ரூபசிங்கவே தனது மனை வியை மருத்துவமனையில் சேர்த்துள்ளார். ஆனல் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து இராணுவஅதிகாரி ரூபசிங்க மீது விசார ணை நடத்தப்பட்டது. அவரது படுக்கை அறையில் இருந்து கைத் துப்பாக்கியும் திருமண புகைப்படத் தொகுப்பும் கைப்பற்றப் பட்டன. இந்நிலையில் இக்கொலை தொடர்பாக ரூபசிங்கவை பொலிஸார் கைது செய்தனர். இராணுவபொலிஸாரும்தனியே விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-5)

# மனித வாழ்வானது இறைவனை சென்றடையும் வழியில் பயணிக்க வேண்டும்

இறைவனின் அளவு கடந்த அன்பின் அடையாளமே இவ்வுலகமாகும். மனிதனானவன் இறைஅன்பின் மேலான அடையாளமாக விளங்குகின்றான். மனிதனிடமே இறைவன் இவ்வுலகைப் பாதுகாத்து விரு த்தி செய்யும் பொறுப்பையும் ஒப்படைத்தான். மனித இனம் பல்கிப் பெருகி இவ்வுலகம் விருத்தி யடைந்தது.



ஆதிமனிதன் இறைவன் வார்த்தைக்கு கீழ்ப்படியாமை யினாலே இவ்வுலகில் பாவம் புகுந் தது. பாவத்தின் விளைவே மனி தர்கள் இடையே ஏற்படும் பிரிவி னைகள்.

இறைவனின் திட்டம் நிறை வேற தமது ஏகமகனாகிய இயே சுக் கிறிஸ்துவை இவ்வுலகிலே மனித வடிவில் பிறக்கச் செய்தார். இறை அன்பின் உச்சவடிவமாக இயேசுக் கிறிஸ்து இவ்வுலகில் தமது வாழ்வாலும் போதனையாலும் தாம் இறைவனிடம் இருந்து வந்தவர் தேவகுமாரன், இறை அரசின் மைந்தன் என்பதையும் நிரூபித்துக் காட் டினார்.

மனிதர்பலர் அவரை ஏற்றுக்கொண்டார்கள். இன்னும் அதிகமானோர் அவரை ஏளனம் செய்தார்கள. ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அவரின் அன்பு வழியை பரிகசித்தார்கள். ஆனா லும் இயேசு மனிதர்கள் மேல் இரக்கம் காட்டினார். அவர்களை மன்னித்தார். ஆனாலும் மனிதன் இறைமகனுக்குக் கொடுத்த பரிசு என்ன . சிலுவை மரணம் . சிலுவையினாலேயே இயேசு மாண்பு பெற்றார். அதன் வெளிப்பாடே கிறிஸ்தவம்.

***அன்புப்பாதையில் பயணிக்க:-***

விஞ்ஞான தொழில்நுட்பத்தினால்விருத்தியடைந்துள்ள உலகம் விலை கொடுத்து விதியுடன் விளையாடுகின்றது. அன்புப் பூங்காவில் அழகை ரசிக்காமல் புரையோடிப் போன பொறாமையின் வெளிப்பாடுகளை போரிலும் , வன்முறையி லும் அழிவுகள் ஊடாகவும் நியாயப்படுத்துகின்றது.

**பரமபிதா காட்டிய பாதை**

அமைதி இழந்து ஒற்றுமை குலைந்து வெறுப்பும் பகை மையும் அதிகரிக்கச் சாத்தானானவன் மனிதர்களை ஆசை யினாலே தூண்டிவிடுகின்றான். அவனின் வலையில் சிக்கித் தவிப்போரே அனேகம்பேராக இருக்கின்றனர். அலகையின் பாதை அகன்றபாதை. தேவனின் பாதை இடுக்க மானபாதை – இதிலே நுழைந்து செல்பவரும் சிலரே . ''அமைதியையும் மகிழ் வையும் தன் இயல்பாக்கெண்ட வன் வயதானதையும உணர் வதில்லை.'' என்று பிளேட்டோ என்ற அறிஞன் கூறுகின்றார்.

**அன்ரனி பீற்றர்**

***நம்பிக்கை வாழ்வாக மலருதல்:-***

மனித வாழ்வானது இறைவனைச் சென்றடையும் வழி களிலே பயணிக்க வேண்டும் . அயலவரை நேசிக்கின்ற நல்ல மனப்பாங்கு வளர வேண்டும்.

துன்பத்தில் உள்ளோருக்கு உதவும் இரக்கம் நெஞ்சில் பிறக்கவேண்டும்.அப்போதுதான் நாம் இறைவனைத் தரிசிக்கும் பேறுபெறலாம்.

# ஜே.வி.பியினரை அரசியலில் ஓரங்கட்டவே தேசிய அரசாங்கம் அமைக்கும் திட்டம்

## ரணிலுக்குப் பிரதமராக ஆசை - மங்கள, சிறிபதி எதிர்ப்பு



(கொழும்பு)

ஜே.வி.பியை ஓரங்கட்டுவதற்காகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய அரசாங்கத்தை அமைக்க திட்டமிட்டதாக ஜே.வி.பியின் மத்திய குழு கருதுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் ஜே.வி.பியின் ஒத்துழைப்பை பெறுவதற்கு ஜனாதிபதி மகிந்த பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டபோதிலும் அதனையெல்லாம் ஜே.வி.பி புறந்தள்ளிவிட்டதனால் அந்த கட்சியை ஓரங்கட்டுவதில் ஜனாதிபதி உறுதியாக இருப்பதாகவும் இதற்காகவே அவர் ஐ.தே.கட்சியின் அதிருப்திக் குழு மூலமாக ரணில் விக்கிரமசிங்காவை தேசிய அரசு அமைக்க அழைத்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால் ஜனாதிபதி மகிந்த மீது ஜே.வி.பி கடும் ஆத்திரம் கொண்டுள்ளதாகவும், தேசிய அரசில் இணைவதற்கு ரணில் மறுப்புத் தெரிவித்தமையால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு அடிப்படையில் இணைந்து செயற்பட ஜே.வி.பி விருப்பம் கொண்டுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை தேசிய அரசில் இணைந்து பிரதமர் பதவியை பொறுப்பேற்கும் விரும்பம் ரணில் விக்கிரமசிங்காவுக்கு இருந்தபோதிலும் அதற்கு மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் உடன்பாடு தெரிவிக்காமையாலேயே தேசிய அரசமைக்கும் அழைப்பை ரணில் ஏற்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ந-5)

### உலகமயமாதல் என்றுமில்லாதவாறு...

துடிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும்.

பழமைவாத மரபுவழிகளில் இருந்து விலகி கற்பனைகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்காது எந்தவொரு விடயத்தையும் வித்தியாசமாக விசித்திரமாக நோக்கவேண்டும். பரந்து வரிந்த மனம் படைத்தவர்களாக இருக்கவேண்டும்.

திறந்த உலகில் மலிந்து கிடக்கின்ற சவால்களை ஏற்று எதிர் நீச்சல் போடுகின்ற மனோநிலையோடு இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக சமூகப் பொறுப்புள்ளவர்களாக தான் சார்ந்த மக்களினதும் தான் சார்ந்த தேசத்தினதும் நலன்களை முதன்மைப்படுத்தி முன்னெடுப்பவர்களாக இருக்க வேண்டும்.

இத்தகைய சீரிய அரிய பண்புகளை எமது தேசப்படைப்பாளிகளிடம் வளர்த்து அவர்களுக்கு சிறந்த களம்அமைத்துக் கொடுத்து, 'வெளிச்சம்' இன்று பல்வேறு படிநிலைகளில் பரிணாம வளர்ச்சி கண்டு வருகிறது.

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தின் வெளியீடாக பல்வேறு படைப்பாளிகளின் ஆக்கப்படைப்புக்களைக் கொண்ட தொகுப்பாக, தமிழீழ மண்ணையும் அந்த மண்ணில் பற்றி எரிகின்ற விடுதலைப் போராட்டத்தையும் அந்த போராட்டத்தை முன்னெடுத்துவரும் அந்த மக்களின் சமூக பண்பாட்டு வாழ்வையும் சித்திரிக்கும் வரலாற்றுப் பதிவேடாக வெளிச்சம் கால்பதித்து அதன் நூறாவது இதழ் வெளிவருவது எமக்கு பெரும் மகிழ்வையும் தருகிறது.

பொதுவாகவே செய்திப் பத்திரிகைகளும் சரி இதழ்களும் சரி காலங்களைக் கடந்து சென்று எந்தக் காலத்திற்கும் பொருந்துவனவாக காலத்தால் சாகாது நீடித்து நிலைத்து நிற்பது கிடையாது. அவை கால முடிபோடு மூச்சடங்கிப்போவன. காலாவதியாகிப் பயன் குன்றிப் போவன. ஆனால் வெளிச்சம் காலத்தால் இறவாத தகைமை பெற்று நிற்கின்றது. கால ஓட்டத்தில் கரைந்து விடாது நிலைத்து நிற்கின்றது.

தமிழீழ மக்கள் விடுதலை வேண்டிப் போர்க்கோலம் பூண்டு நிற்கின்ற இந்த வேளையிலே இந்தக் காலத்தின் தேவையறிந்து, வரலாற்று ஓட்டம் அறிந்து, வெளிச்சம் ஆற்றும் பெரும் விடுதலைப்பணியால் அது இந்த உயர் நிலையை அடைந்திருக்கின்றது.

புதிய ஆய்வுகள் மூலம் எமது இருண்ட பழைமைக்கு ஒளியேற்றி எமது தாயகத்தில் நிகழ்ந்த சமகால, கடந்த கால நிகழ்வுகளை கதைகளாகவும் கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் கனமான ஆய்வுகளாகவும் வெளிச்சம் கால ஒழுங்கில் கட்டமைத்து வருகின்றது.

எமது விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்தும் கருத்துக்களை விதைத்து எமது தாயகத்தின் வளர்ச்சிக்கும் எமது தேசியத்தின் எழுச்சிக்கும் முனைப்பூட்டி வருகின்றது. எமது தேசிய இனக் கட்டமைப்பை சீர்குலையாது பாதுகாத்து எமது தேசத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் அயராது உழைத்து வருகின்றது.

வெளிச்சத்தின் இத்தகைய உயரிய படைப்புக்கள் எமது தேசத்தின் அறிவுசார் பாரம்பரியத்தையும் அதன் அகன்ற பரம்பரையும் அதன் உயிரோட்டத்தையும் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

அத்தோடு எமது படைப்பாளினது பரந்த அறிவும் போருக்குள் வாழ்ந்த அவர்களினது விரிந்த வாழ்வு அனுபவமும் சீரிய சிந்தனைப் போக்கும் அவர்களது அளவற்ற ஆற்றலும் விடுதலைக்காக அவர்கள் துடிக்கின்ற துடிப்பும் வெளிச்சத்தில் வெளிப்பட்டு நிற்கின்றது.

100-வது வெளிச்சம் எமது விடுதலை வானில் பிரகாசிக்கின்ற இந்த வேளையிலே எமது தேசத்தில் மலர்ந்த படைப்பாளிகளான இந்த அறிவு மலர்களுக்கு எனது அன்பையும் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வெளிச்சம் இதழின் பெருவளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது உழைத்து வரும் எமது கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் புதுவை அண்ணன் அவர்களுக்கும் இந்த வெற்றிக்கு உறுதுணையாக உழைத்த அனைவருக்கும் இந்த வேளையிலே எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

16 ஆண்டுகளாக எமது மண்ணில் கால் பதித்து எமது மனங்களுக்கு வெளிச்சம் காட்டும் வெளிச்சத்தின் இலக்கியப் பயணம் இலட்சியப் பயணமாகத் தொடர எனது நல்வாழ்த்துக்கள் எனத் தெரிவித்துள்ளார். (ந-5)

### லக்ஸ்மன் கதிர்காமர் வழக்கு இரு தமிழர்கள் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழர்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

கதிர்காமரின் கொலை வழக்கு தொடர்பாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சந்தேக நபர்களும் பிணை வழங்க மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத் தரப்பு எதிர்ப்புத் தெரிவிக்காமையினால் அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.

சாட்சியாளர்களை அச்சுறுத்தக்கூடாது என்று நிபந்தனை விடுக்கப்பட்டு ஒரு இலட்சம் ரூபா பணம் மற்றும் பத்து இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் தமிழினியன் மற்றும் ஜனகன் ஆகிய இரு சந்தேக நபர்களும் விடுவிக்கப்பட்டனர். (ந-5)

### அரியாலையிலும்...

கொல்லப்பட்டுள்ளார். குறித்த சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா, பிரேத பரிசோதனைக்காக சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

### களுவாஞ்சிக்...

மட்டக்களப்பு பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த பொலிஸ் அதிகாரிகளை இலக்குவைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தையடுத்து அப் பகுதியில் பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸாரின் சடலங்கள் களுவாஞ்சிக்குடி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ந-5)

### மக்கள்...

கந்தவனம் கேதீசன் (வயது-26) என்ற தனியார் பாதுகாப்பு சேவை பணியாளரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த பாதுகாவலர் யாழ்.பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கியின் இரவுநேர பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை அங்கு சென்ற ஆயுததாரிகள் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

எனினும் பிரஸ்தாப பாதுகாவலர் சூட்டுக் காயத்துடன் தப்பியோட முற்பட்ட போது 200 யார் தூரம் துரத்திச் சென்ற ஆயுததாரிகள் பல்கலைக்கழக மலசலகூடத்தில் வைத்துச் சுட்டுக்கொலை செய்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என தடயங்கள் மூலம் தெரியவந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் நேற்றுக் காலை யாழ்.பல்கலைக் கழக மலசலகூடப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிவான் இ.த. விக்னராஜா, பிரேத் பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

### புலிகள் தரப்பில் இவ்வருடம்...

இந்த வருடத்தில் கடந்த 20 ஆம் திகதி வரை 954 புலிகள் உயிரிழந்திருக்கின்றனர் என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களில் யாழ்.மாவட்டத்தில் 267 ஆண்களும் 48 பெண்களும், மட்டு. அம்பாறை மாவட்டத்தில் 155 ஆண்களும் 10 பெண்களும், வன்னி மாவட்டத்தில் 188 ஆண்களும் 30 பெண்களும், திருகோண மலை மாவட்டத்தில் 52 ஆண்களும் 4 பெண் களும்,முல்லைத்தீவு மாவட்டத்தில் 113ஆண்களும் 20 பெண்களும், மன்னார் மாவட்டத்தில் 42 ஆண்களும் 10 பெண்களும், வெளியிடங்களில் 15 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி 832 ஆண்களும் 122 பெண்களுமாக மொத்தம் 954 பேர் இந்தவருடம் புலிகள் அமைப்பில் உயிரிழந்திருக்கின்றனர். அதேநேரம் 2007.11.20 திகதி வரை உயிரிழந்த கரும்புலிகளின் விபரமும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இதுவரை 343 கரும்புலிகள் தரையிலும் கடலிலும் உயிரிழந்திருக்கின்றனர். இவர்களில் 250 ஆண்களும் 93 பெண்களும் அடங்குவர். 81 ஆண்களும் 21 பெண்களுமென மொத்தம் 102 தரைக் கரும்புலிகள் உயிரிழந்திருக்கின்றனர்.

169 ஆண்களும் 72 பெண்களுமாக மொத்தம் 241 கடற்கரும்புலிகள் உயிரிழந்திருக்கின்றனர். இவர்களை விட எல்லைப் படை வீரர்களில் 274 ஆண்களும் 5 பெண்களும் காவல்துறையில் 34 ஆண்களும் 3 பெண்களும் உயிரிழந்திருக்கின்றனர்.

அத்துடன் நாட்டுப் பற்றாளர்களில் 434 ஆண்களும் 26 பெண்களும், 18 மாமனிதர்களும் இதுவரையான காலப் பகுதியில் உயிரிழந்திருக்கின்றனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது. (ந-5)

### பாகிஸ்தானை ஆதரிக்கும்...

இது குறித்து உகண்டாவிலுள்ள இலங்கை வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் குழுவுடன் இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் குழுவினர் கலந்துரையாடியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானை ஆதரிக்கும் நிலைப்பாட்டால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் விரிசல் நிலை ஏற்படும் சாத்தியங்கள் தோன்றியிருப்பதாக இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து இலங்கை அரச உயர் மட்டத்துடன் இந்தியா விரைவில் உத்தியோக பூர்வமான பேச்சு நடத்தவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையுடன் மிக நெருக்கமான உறவுகளை இந்தியா கொண்டிருக்கும் நிலையில் பாகிஸ்தானை ஆதரிக்க இலங்கை எடுத்த முடிபானது இந்தியாவை சினம் கொள்ள வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பொதுநலவாய அமைப்பிலிருந்து பாகிஸ்தானை விலக்கியமைக்கு இலங்கை எதிர்ப்புத் தெரிவித்துள்ளதையடுத்து எழுந்துள்ள இலங்கை-இந்திய உறவு நிலை பாதிப்பை சமாளித்து சீர்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை உகண்டாவில் சந்தித்து நிலைமையை விளக்கியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன. (ந-5)


**உரப் பைகள் விற்பனைக்குண்டு**

உரப் பைகள் விற்பனைக்குண்டு. தேவையானோர் தமது கூறுவிலைகளை வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகஸ்தர்
வலம்புரி


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 25.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.